வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 12.05.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 154 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## இராணுவம், திணைக்களங்கள்

# காணி ஆக்கிரமிப்புகளை உடன் நிறுத்த வேண்டும்!

## உரிய தரப்புகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 12

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம், தொல்பொருள், வனவளத் திணைக்களம் உட்பட சகல அரச திணைக்களங்களும் முன்னெடுக்கும் காணி ஆக்கிரமிப்பு - சுவீகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய திணைக்களங்களின் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

நேற்று தமிழ் கட்சிகளுடனான சந்திப்பின்போது திணைக்களங்களின் பணிப்பாளர்களும் பங்கேற்றிருந்த நிலையிலேயே அவர்களுக்கு இந்தக் கட்டளையை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. சுமார் இரண்டு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் காணி மற்றும் பிற பிரச்னைகள் தொடர்பாக பேசப்பட்டது.

**காணிகள் ஆக்கிரமிப்பு**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம், தொல்பொருள், வனவளத் திணைக்களம் என்பன காணிகளை ஆக்கிரமிப்பு செய்வதுடன் சுவீகரித்தும் வருகின்றன. இவை உடனயாக நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ் கட்சிகள் வலியுறுத்தினர்.

அத்துடன், இந்த மாகாணங்களில் ஒவ்வொரு திணைக்களங்களும் குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் எவ்வாறு விடயங்களை கையாள்வது என்பது 15

## மன்னாரில் சிறுமியரை கடத்த முயன்ற இருவர் மடக்கி பிடிப்பு

மன்னார், மே 12

மன்னாரில் இரு சிறுவர்களுக்கு இனிப்புகளை கொடுத்துவிட்டு அவர்களை கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தலைமன்னார் பொலிஸ் பிரிவில் நேற்று வியாழக்கிழமை மதியமளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வியாபார பொருட்களை விற்பனை செய்ய வந்த வாகனம் ஒன்றில் இருந்த சாரதியும் அவரின் உதவியாளரும் வீதியில் சென்ற இரு சிறுமிகளுக்கு இனிப்புகளை வழங்கி வாகனத்தில் கடத்த முற்பட்டுள்ளார்.

சிறுமிகள் இருவரும் அவர்களிடமிருந்து தப்பி யோடி ஒளிந்துள்ளனர். அவர்களை வாகனத்தில் வந்தவர்கள் துரத்தி கொண்டு 15

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்:

# “கப்பல் நிறுவனத்தின் மீது எதிர்க்கட்சியும் வழக்கு!”

கொழும்பு, மே 12

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் அழிவால் ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்துக்கு ஒத்துழைக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி - ஐக்கிய மக்கள் கூட்டணி சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கமைய, இதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு பூர்வாங்க கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளோம் என்று எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பேசிய அவர்,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் அழிவால் ஏற்பட்ட சேதத் துக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்துக்கு ஒத்துழைக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கமைய, இதனுடன் தொடர்புடைய 7 நிறுவனங்களுக்கு பூர்வாங்க 15

## அதிகார பகிர்வு குறித்து இன்று பேச்சு நடக்கும்!

கொழும்பு, மே 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையில் இன்றைய தினமும் பேச்சு நடக்கவுள்ளது.

நேற்றைய தினம் தமிழ் மக்களின் காணி பிரச்னை மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிற பிரச்னைகள் குறித்து பேசப்பட்டது. இந்த நிலையில், இன்று 15




## “வெடுக்குநாறி எங்கள் சொத்து” வவுனியாவில் நேற்று போராட்டம்!

வவுனியா, மே 12

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் கைதை கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வவுனியா மருத்துவமனை சுற்று வட்ட வீதியில் குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று மாலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “தமிழர்களின் தொன்மையை அழிக்காதே”, “வெடுக்குநாறி எங்கள் சொத்து, தொல்லியல் 15

## எக்ஸ்பிரஸ் கப்பல் விவகாரத்தில் அரசின் இனவாத முகம் அம்பலம்!

### சுமந்திரன் எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 12

சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை மறுக்கும் அரசாங்கத்தின் இனவாத முகம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தின் ஊடாக வெளிப்பட்டுள்ளது என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கப் பெறவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப் படவுள்ள நிலையிலும் பல பிரச்னைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. 15

## வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய

# பூசகர் உட்பட இருவர் கைது; விடுதலை செய்தது நீதிமன்று

வவுனியா, மே 12

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் பூசகர் உட்பட இருவரை நெடுங்கேணி பொலிஸார் நேற்று கைது செய்தனர். தொல்பொருட்களுக்கு சேதம் ஏற் படுத்தினர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெடுக்குநாறி மலையில் ஆதிசிவன் ஆலயத்தில் விக்கிரகங்கள் கடந்த மார்ச் 26ஆம் திகதி உடைத்தெறியப்பட்டன. அங்கு கடந்த ஏப் ரல் 28ஆம் 15

## மாகாண சபை தேர்தல் திருத்தம் வர்த்தமானி வெளியிடப்பட்டது!

கொழும்பு, மே 12

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் வர்த்த மானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டம் இரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால், பழைய முறையில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற 15

# தொல்பொருள் திணைக்களம் பிக்குகளிடம் பணம் பெறக்கூடாது!

## ஜனாதிபதி ரணில் உத்தரவு



கொழும்பு, மே 12

தொல்லியல்இடமொன்று அடையாளம் காணப்பட்டால் அங்கு வீடு கட்டவோ, விகாரை கட்டவோ அனுமதியில்லை. நீங்கள் தனியார் துறையல்ல. பிக்குகளிடமோ வேறு எவரிடமோ பணம் பெற்று தொல்லியல் ஆய்வை செய்ய முடியாது. சிங்கள நாகரிகம் பிறந்த இடங்களில்கூட இன்னும் பணிகளை செய்யவில்லை என்று தொல்லியல் திணைக்களத்தின் பலவீனங்களை சுட்டிக்காட்டியுள்ளார் ஜனாதிபதி 15

## இப்படியும் நடக்கிறது...!

சில நாட்களுக்கு முன்னர் பனங்காட்டான் எழுதிய கட்டுரை ஒன்றில் ரணில் பற்றி எழுதியிருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

அப்போது, ரணில் கல்வி அமைச்சராக இருந்தார். இலங்கை ஆசிரியர் சங்கம் மிகப்பெரும் போராட்டம் ஒன்றை நடத்தியது. வாரக் கணக்கில் இது நீண்டு சென்றது. பேச்சு எதுவும் இணக்கத்தைக் கொண்டுவரவில்லை. திடீரென இச்சங்கத்தின் செயலாளர் எச். என். பெர்னாண்டோவுக்கு கொழும்புக்கு வெளியே தூரப் பிரதேசத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அரசியல் ரீதியான பழி வாங்கும் நடவடிக்கை இது. சம்பள உயர்வு, நியாயமான பதவி உயர்வுகளை கோரிய பதாதைகளுடன் இடம் பெற்று வந்த ஆசிரியர்களின் போராட்டத்தின் இலக்கு மாறியது. சங்கச் செயலாளர் பெர்னாண்டோவின் இடமாற்றத்தை உடன் இரத்துச் செய்ய வேண்டுமென புதிய பதாதைகளோடு போராட்டம் காணப்பட்டது.

நல்ல பிள்ளையாக தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பிய ரணில், போராட்டக்காரருடன் பேச்சு நடத்தி ஒரு சமரசத்துக்கு வந்தார். போராட்டத்தை நிறுத்தி அமைச்சரவையுடன் பேசி இடமாற்றத்தை இரத்துச் செய்யலாமென்று உறுதி கூறி, அவ்வாறே செய்து முடித்தார். போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கை மறக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தகவலை படித்த நண்பர் ஒருவர் அண்மையில், நடந்த சம்பவம் ஒன்றை நினைவுகூர்ந்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் எரிபொருட்களை விநியோகம் செய்யும் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தனர். இதனால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு. மக்கள் வரிசையில் நிற்கத் தொடங்கிவிட்டனர்.

வேலைநிறுத்தக் காரர்களுடன் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகர பேச்சு நடத்திப் பார்த்தார். அவர்கள் ஒத்துக் கொள்வதாக இல்லை. வரிசைகள் நீண்டுகொண்டு செல்ல மீண்டும் வரிசை யுகம் வந்துவிடுமோ என்ற பயம் பலருக்கும்.

கோட்டாபய காலத்தில் வெளிநாடுகளிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய டொலர் இல்லாததால் நெருக்கடி. ஆனால், இப்போது எரிபொருள் இருந்தாலும் அவற்றை விநியோகிக்க ஆட்கள் இல்லை.

தன்னாலான மட்டும் முயற்சி செய்த அமைச்சர் காஞ்சன கடைசிக் கட்டமாக ஜனாதிபதிக்கு தொலைபேசியில் நிலைமையை விளக்கினார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி, உடனடியாக இன்று இரவு முதல் எரிபொருட்களின் விலைகளை குறைக்கவிருப்பதாக அறிவித்தல் கொடுக்கச் சொன்னார்.

அவர் உடனே அதனைச் செய்ய, எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நின்றவர்கள் நாளை வாங்குவோம் என்று கலைந்துசென்றனர். வரிசைகள் காணாமல் போய்விட்டன. இரவோடு இரவாக இராணுவத்தின் உதவியுடன் எரிபொருள் விநியோகம் நடந்து முடிந்தது. மறுநாள் வரிசைகளே இல்லை.

அமைச்சரை அழைத்த ஜனாதிபதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் விவரங்களை அவர்கள் எந்த எந்த கட்சிகளின் ஆதரவு தொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்ற விபரத்துடன் தருமாறு கேட்டாராம்.

கிடைத்த பட்டியலில் பொதுஜன பெரமுன கட்சியின் தொழில்சங்கத்தினர் இருபத்தி இரண்டுபேரையும் உடனே பணி நீக்க உத்தரவை விடுக்குமாறு ஜனாதிபதி அமைச்சருக்கு பணிக்க அவரும் அப்படியே செய்தார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட செய்தி கிடைத்த மறுகணமே மற்றைய அனைத்து தொழில் சங்க உறுப்பினர்களும் மறுநாளே வேலையில் பிரசன்னமாகி விட்டனர்.

பிறகு என்ன நடக்கும் என்பது தெரிந்தவைதானே. அவர்கள் நேராக மகிந்தரின் வீட்டுக்கதவை தட்டியிருந்தார்கள்.

எந்தப் பிரச்னையையும் நொடிப்பொழுதில் தீர்க்கும் இந்த மந்திரவித்தை ரணிலுக்கு மட்டுமே தெரிந்தது என்றார் இந்த தகவலை சொன்ன நண்பர்.

இப்போது இந்த ஊர்க் குருவியின் கவலை எல்லாம் நமது தலைவர்களுடன் பேச்சு நடத்தும் ரணில், அதைபாணியில் அவர்களை வழி பண்ணி விடுவாரோ என்பதுதான்.!

**- ஊர்க்குருவி**

# ஜானகவை பதவி நீக்குவதற்கு பாராளுமன்றில் பிரேரணை!

கொழும்பு, மே 12

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை 2023 மே 24ஆம் திகதி எடுத்துக் கொள்ள கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து தீர்மானத்தின்மீது விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ரத்நாயக்க மீதான விசாரணை அறிக்கை கடந்த அரசாங்கத்தின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு சுமையேற்படுத்தும் விதமாக அரசாங்கம் மின் கட்டணம் உள்ளிட்டவற்றை உயர்த்திய போது, ஜானக ரத்நாயக்க அதற்கு பெரும் இடையூறாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஆளுநர்கள் பதவி விலக வேண்டும் சிறீலங்கா சுதந்திர கட்சி வலியுறுத்து

கொழும்பு, மே 12

ஜனாதிபதி ஒருவர் பதவி விலகும்போது அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களும் பதவி விலகுவது சம்பிரதாயமாகும். ஆனால், தற்போதுள்ள ஆளுநர்கள் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக ஒவ்வோர் அரசியல்வாதிகளிடமும் சென்று முறையிடுகின்றனர். இவற்றை தவிர்த்து புதிய நியமனங்களுக்கு இடமளிப்பதே ஒழுக்கமான செயலாகும் என்று சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனருமான ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"நான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு ஆளுநராக செயல்பட்டிருக்கின்றேன். எனினும், கடந்த 2020 ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய அவர் விரும்பும் ஆளுநர்களின் நியமனத்துக்கு இடமளிக்கும் வகையில் நான் எனது பதவியை இராஜிநாமா செய்வதாக உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவித்தேன்.

மாகாண சபைகள், பிரதேச சபைகள் உள்ளிட்டவற்றுக்கென பதவிக் காலம் காணப்படுவதைப் போன்று ஆளுநர்களுக்கும் நியமனம் பெற்றதிலிருந்து 5 ஆண்டுகள் பதவிக் காலம் காணப்படுகின்றன. எனினும், ஜனாதிபதியின் பிரதிநிதிகளான அவர்கள் புதிய ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்படும்போது தாமாக பதவி விலகுவது ஒரு சம்பிரதாயமாகும்.

அதன் அடிப்படையிலேயே தற்போதுள்ள ஆளுநர்கள் சிலருக்கு பதவி விலகுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கக் கூடும். எனினும், அவர்களில் சிலர் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதாகவும் சிலர் வேறு அரசியல் தலைவர்களிடம் சென்று புகாரளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில், இது ஒழுக்கமான விடயமன்று. ஜனாதிபதிக்கு அவர் விரும்புபவர்களை பிரதிநிதிகளை ஆளுநர்களாக நியமிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் ஒவ்வொருவரும் பதவி விலகுவதே ஒழுக்கமாகும் - என்றார்.

(ஐ)

# ரயில் திணைக்களத்துக்கு 3,000 பேர் புதிதாக சேர்ப்பு என்பது உண்மையல்ல

கொழும்பு, மே 12

புகையிரத திணைக்களத்துக்கு 3,000 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் மூடப்பட்டு அங்கிருந்த ஊழியர்கள் அகற்றப்படுவதாக தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் தொடர்ந்து தெரிவிக்கையில்,



அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சுயாதீனமாக ஓய்வு பெற்றுச் செல்லும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க புகையிரதத் திணைக்களத்திலும் சில ஊழியர்கள் சுயாதீனமாக ஓய்வு பெற்றுச் சென்றிருக்கலாம்.

எந்த அழுத்தங்களும் இல்லாமல் சுயாதீனமாக ஓய்வு பெறுபவர்களுக்கு அத்தகைய தீர்மானத்தை எடுக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் யாரையும் பலவந்தமாக சேவையில் இருந்து நீக்கவில்லை. அவ்வாறு விருப்பமான 600 பேர் சுயாதீனமாக ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர்.

அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழேயே அந்த செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. அதனால் புகையிரதத் திணைக்களத்துக்கு 3,000 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை.

பல்வகை செயலணிக்கு அரசாங்கத்தால் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 3,000 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காகவே புகையிரதத் திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் - என்றும் அவர் கூறினார்.

# ஜப்பானிலிருந்து சட்டவிரோதமாக இறக்கிய 5 வாகனங்கள் பறிமுதல்!

கொழும்பு, மே 12

காரின் உதிரி பாகங்கள் எனக் கூறி ஜப்பானிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட நான்கு மிட்சுபிஷி ஜீப்களும் கார் ஒன்றும் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன என்று இலங்கை சுங்க திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த 5 வாகனங்களின் மதிப்பு சுமார் 10 கோடி ரூபாய் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த 5 கார்களும் இலங்கை சுங்கத்துக்கு வாகன உதிரிப் பாகங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.05.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெளி சக்திகள் என்னும் மாயை?

பாராளுமன்ற உறுப்பினரும் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ 'அறகலய'வுக்கு (மக்கள் கிளர்ச்சி) பின்னால் வெளிநாட்டு சக்தியொன்று இருந்ததாகவும் அவர்களே ரணில் விக்கிரம சிங்கவை அதிகாரத்துக்கு கொண்டு வந்தனரெனவும் - அவர்கள் நியமித்த அமைச்சவையே இப்போது இருப்பதாகவும் கூறியிருக்கின்றார். சில நாட்களுக்கு முன்னர் நாட்டை தற்போது அமெரிக்க தூதுவர்தான் வழிநடத்துவதாக விமல் வீரவன்ஸ கூறியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து வெளியேற்றியதும் அவர்தானென்றும் தனது நூலில் எழுதியிருக்கின்றார். இந்த நிலையில் அதனை வேறு சொற்களில் நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார். 2015இல் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ தனது தோல்விக்கு பின்னால் இந்திய உளவுத் துறையான 'றோ' இருந்ததாகக் கூறியிருந்தார். பின்னர், றோ மட்டுமல்ல அமெரிக்க உளவுத் துறையான 'சி. ஐ. ஏ' மற்றும் பிரித்தானிய உளவுத்துறையான 'எம். ஐ6' இருந்ததாகக் குறிப்பிட்டார். இதன் மூலம், தான் சதியொன்றின் மூலமே தோற்கடிக்கப்பட்டதான கதையொன்றை தனது ஆதரவாளர்கள் மூலம் பரப்பி அனுதாபம் தேடும் நோக்கிலேயே இவ்வாறான கதைகளை ராஜபக்ஷ கூறினார்.

இப்போது அறகலயவுக்கு பின்னாலும் வெளிநாட்டு சக்தியொன்று இருந்ததாகக்கூறி தாங்கள் சதியின் மூலம் வீழ்த்தப்பட்டதான கதையொன்றை சிங்கள மக்கள் மத்தியில் விதைக்க முற்படுகின்றனர். தேர்தலில் வாக்களிப்பது மக்கள். உளவுத்துறைகள் அல்ல. பலம் பொருந்திய நாடுகள் ஒவ்வொன்றும் தங்களின் நலன்களின் அடிப்படையில் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுக்கும். அதனை நம்மால் தவிர்க்க முடியாது - அதேவேளை அவற்றை நம்மால் இனம் காணவோ - தடுத்து நிறுத்தவோ முடியாது.

இனம் காண முடியாத ஒன்றை எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும். கனடா உலகின் முதல் சக்தியாக கருதப்படும் அமெரிக்காவுக்கு அருகிலிருக்கும் ஒரு நாடு. அந்த நாட்டின் தேர்தல் விடயங்களில் சீனா தலையீடு செய்ததாக அந்த நாட்டின் உளவுத்துறை கூறுகின்றது. எனவே, தலையீடுகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெறலாம். ஆனால், அடிப்படையான விடயம் மக்கள்தான் வாக்களிக்கின்றனர். எனவே, தேர்தலில் தோல்வியுறும்போது அல்லது அதிகாரத்தை இழக்கின்றபோது ஏன் மக்கள் எங்களை வெறுக்கின்றனர் என்னும் கேள்வியையே முதலில் கேட்க வேண்டும். ஆனால், அதனை எவரும் செய்வதில்லை!

இதேபோன்று, தமிழ் சூழலிலும் எடுத்ததற்கெல்லாம் இந்திய அடிவருடிகள், முகவர்கள் என்னும் சொல்லை காணமுடிகின்றது. மக்களின் பிரச்னைகளுக்காகத் தங்களை அர்ப்பணிக்க முடியாத அரசியல் குழுக்களே மற்றவர்களைத் தவறானவர்களாகக் காண்பிக்க முயற்சிக்கின்றனர். ஓர் அரசியல் கட்சியை அல்லது ஒரு கட்சியின் தலைவரை - சரியானவரென்று மக்கள் கூற வேண்டும். அவர்கள் தங்களுக்கு தாங்களே - சரியானவர்கள் - சுத்தமான தமிழ் தேசியர்கள் என்னும் மாலைகளை சூட்டிக்கொள்ளக் கூடாது. ஆழமாக நோக்கினால் தெற்கில் ராஜபக்ஷக்கள் செய்வதையே இவர்கள் வடக்கில் செய்கின்றனர். அடிப்படையில் இவர்கள் அனைவரும் ஓர் அரசியல் குலத்தினரே.

எல்லாவற்றுக்கும் பின்னால், வெளி சக்திகள்தான் இருக்கிறார்கள் என்றால் - அதன் பின்னர் எதற்காக நாம் இயங்க வேண்டும். அனைத்துக்கும் பின்னால், வெளித்தரப்புகள் என்பது அடிப்படையில் ஓர் அரசியல் மாயை. அதாவது, இல்லாத ஒன்றை இருப்பதாகக் காண்பித்து அதன் மூலம் தங்களை அரசியலில் பலப்படுத்திக் கொள்ள நினைப்பவர்களே சதா வெளித்தரப்புகளை கனவு காண்கின்றனர்.

# அரசாங்க உத்தியோகத்தர்கள் தேர்தலில் போட்டியிட இனி முன்வருவது சந்தேகம்

## தயாசிறி ஜயசேகர எம். பி.



கொழும்பு, மே 12

அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடுகளால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்த ஒட்டுமொத்த வேட்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இனிவரும் காலங்களில் அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட முன் வருவது சந்தேகத்துக்குரியது என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவிருந்த நிலையில் அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடுகளால் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதனால் 80 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை தெளிவற்றதாகக் காணப்படுகிறது.

வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் போட்டியிட உத்தேசித்துள்ள தேர்தல் தொகுதிக்கு அப்பால்பட்ட தேர்தல் தொகுதியில் சேவையாற்ற முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதிக்கு அப்பால்பட்ட வகையில் சேவையாற்ற குறிப்பிடப்பட்டுள்ளதால் அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒரு துறையில் சேவையாற்றிய அரச சேவையாளர் அருகில் உள்ள தேர்தல் தொகுதியில் அந்த சேவையை தொடர வசதிகள் இல்லாத நிலையில் அவர் மாகாணம் விட்டு மாகாணம் சென்று சேவையாற்ற பணிக்கப்பட்டுள்ளார். இதனால் அரச சேவையாளர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் இந்த பிரச்னைகள் ஏதும் தோற்றம் பெற்றிருக்காது. 80 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 7 ஆயிரத்துக்கும் அதிகமான அரச சேவையாளர்கள் ஏனையோரை விட அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நெருக்கடிகளால் இனிவரும் காலங்களில் அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட முன் வருவது சந்தேகத்துக்குரியது - என்றார். (ஐ)

# வவுனியாவில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி



வவுனியா, மே 12

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறி தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் வலிகளையும் இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயல்பாட்டை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

நேற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக குறித்த செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பாடசாலை மாணவர், பொது மக்கள் எனப் பலரும் கஞ்சி அருந்தி சென்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் கலந்து கொண்டனர். (ஐ)

# பெருந்திருவிழா!


யாழ்ப்பாணம், மே 12

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து, காலையும் மாலையும் திருவிழாக்கள் நடைபெற்று, ஜூன் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல 10.51 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

5ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி, வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். பழைய சிக்கல்கள் தீரும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்களின் புது முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மனஉளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முடிப்பது நல்லது. சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

# தமிழக அமைச்சரவையில் ஐந்து துறைகள் மாற்றம்!

## பாலுவின் மகனும் அமைச்சரானார்

சென்னை, மே 12

தமிழக அமைச்சரவையில் புதிய அமைச்சராக டி. ஆர். பி. ராஜா பதவியேற்றுக்கொண்டார். நிதி அமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் தொழில்நுட்ப துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி. மு. க. அரசு 2021இல் அமைச்சரவையை அமைத்தது. இதில் இரு முறை துறை புதிய அமைச்சர்கள் பதவியேற்றனர். மூன்றாவது ஆண்டில் தி. மு. க. அரசு காலடி எடுத்து வைத்துள்ளது.

இந்த நிலையில், தி. மு. க. பொருளாளர் டி. ஆர். பாலுவின் மகனும் மன்னார்குடி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான டி. ஆர். பி. ராஜா அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இதேபோன்று, தமிழக நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பொறுப்பேற்றுள்ளார். நிதி அமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அமைச்சர் டி.ஆர்பி ராஜாவிற்கு தொழில்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் மனோ தங்கராஜுக்கு பால் வளத்துறை அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மனோ தங்கராஜிடம் இருந்த தகவல் தொழில்நுட்பத் துறை, அமைச்சர் பழனிவேல் தியாகராஜனிடம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் சாமி நாதனுக்கு தமிழ் வளர்ச்சி துறை கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)




# பன்னீரும், தினகரனும் துரோகிகள்! எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, மே 12

ஓ. பன்னீர்செல்வமும் டி. டி. வி. தினகரனும் துரோகிகள் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், "மாயமானும் மண்குதிரையும் ஒன்று சேர்ந்துள்ளன. பூச்சியமும் பூச்சியமும் சேர்ந்தால் பூச்சியம்தான். இப்படித்தான் இருக்கும் அவர்களின் இணைப்பு.

இரண்டு துரோகிகளும் ஒன்றாக சேர்ந்து ஓர் அணியை உருவாக்குவதாகக் கூறியுள்ளார்கள். தினகரன் கூடாரம் காலியாகிக் கொண்டு உள்ளது. காலியாக உள்ள கூடாரத்தில் ஒட்டகம் புகுந்த நிலைதான் தற்போது உள்ளது. பண்ருட்டி ராமச்சந்திரன் எந்த கட்சிக்கும் விசுவாசமாக இருந்தது இல்லை- என்றார். (ஐ)

# நிர்வாகக் காரணங்களுக்காகவே அமைச்சர்களின் துறைகள் மாற்றம்!

## தமிழக முதல்வர் ஸ்டாலின்

சென்னை, மே 12

நிர்வாகக் காரணங்களுக்காக அமைச்சர்களின் துறைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் புதிய அமைச்சர்களுடன் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தொழில்துறை அமைச்சராக ஏற்கனவே பொறுப்பு வகித்திருந்த அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அவருக்கு உதவியாக இருந்த அதிகாரிகள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று முன்னணியில் உள்ள தொழில் துறையினரை சந்தித்து முதலீடுகளை ஈர்த்து தமிழகத்தின் வளர்ச்சிக்கு பெரிய உதவிகளை செய்தனர். இதற்காக, அவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டுள்ள டி. ஆர். பி. ராஜா சிறப்பாக செயல்பட்டு அதிக முதலீட்டை ஈர்ப்பார் என்று உறுதியாக நம்புகிறேன். அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகக் காரணங்களுக்காக அமைச்சர்களின் துறைகள் மாறினாலும் தமிழக அரசு தொழில்துறையினருக்கு அளித்து வரும் ஆதரவும் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளும் என்றும் தொடரும்", என்றார். (ஐ)



# இலங்கைக்கு கடத்தவிருந்த 250 கிலோ கடலட்டை சிக்கியது

இராமநாதபுரம், மே 12

இலங்கைக்கு கடத்தவிருந்த 250 கிலோ கடல் அட்டைகளை இந்திய கடலோர பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அண்மைக்காலமாக இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி, வேதாளை, பாம்பன், மண்டபம் உள்ளிட்ட கரையோர பகுதிகளில் இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கடல் அட்டை, சமையல் மஞ்சள், கடல் பல்லி, கஞ்சா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்துவது அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரை ஓரமாக வைக்கப்பட்டிருந்த மூட்டைகளில் 250 கிலோ தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டன. இவை இலங்கைக்கு கடத்தப்படவிருந்தன.

இரு நாட்களுக்கு முன்னர் 2,500 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆசியாவின் ஒற்றுமையை சீர்குலைக்க இடமளியோம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே. 12

**ஆசியாவின் ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கை ஆதரவளிக்காது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

ஆசிய பூகோள அரசியலுக்கும் பசுபிக் பிராந்திய அரசியலுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அந்த வேறுபாடுகளை நாம் உணர்ந்து சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் பேணுவதற்கு செயற்படவேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த இரண்டு தசாப்தங்களில் வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை முன்னேற்றுவதற்கு அணிசேரா கொள்கை, பஞ்சசீலம் மற்றும் ஆசியக் கொள்கைகளைப் பயன்படுத்தவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஆசியாவின் முதலாவது மாநாட்டு மண்டபமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்று முன் தினம் மாலை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் வரலாறு குறித்து எழுதப்பட்ட நூல் ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 25 ரூபா பெறுமதியான நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-

அணிசேரா கொள்கை, பஞ்சசீலம், ஆசியக் கொள்கை ஆகியவற்றைப் பயன்படுத்தி இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். அந்த பொதுவான விடயம் இன்றும் செல்லுபடியாகும். இந்த பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆசியாவின் ஒருமைப்பாடு தொடர்பில் சுட்டிக்காட்டக்கூடிய சிறந்த உதாரணம் என்றே கூறவேண்டும்.

இதனை நாம் அன்பளிப்பாக பெற்றோம். ஆசியாவின் ஒற்றுமையை நாம் தொடர்ந்து பேண வேண்டும். உலக வல்லரசுப் போட்டியில் இந்து சமுத்திர நாடுகளிடையே மட்டுமே ஒற்றுமையை குழப்ப முடியவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.



உலக வல்லரசுகளாக மாற வேண்டும் என்ற இலட்சியத்துடன் சில குழுக்கள் பசுபிக் சமுத்திர நாடுகளுக்கிடையேயான ஒற்றுமையை குலைத்து அவற்றுக்கிடையில் மோதல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. அந்த நிலைமை இந்து சமுத்திரத்திற்குள் ஏற்படுவதைத் தடுக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆசியாவின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு இலங்கை எந்த வகையிலும் துணைபோகாது என்பதையும் வலியுறுத்துகிறேன்.

ஆபிரிக்க பிராந்தியத்திலும் ஏனைய நாடுகளிலும் இலங்கை இராணுவம் பணியாற்றி வருகின்றது. அந்த நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கடற்கொள்ளையர்களிடம் இருந்து அந்நாடுகளை பாதுகாக்கவும் நமது இராணுவம் விரிவான பங்களிப்பை அளித்து வருகிறது - என்றார். (அ)

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேச பொறிமுறையாக இருக்கவேண்டும்

## சபையில் வலியுறுத்தினார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, மே. 12

“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது சர்வதேச பொறிமுறையாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் குழு அமைப்பதில் பயன் இல்லை.” -என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், “2009 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில்தான் மிக மோசமான படுகொலைகள் அரசால் அரங்கேற்றப்பட்டன.” எனவும் சுட்டிக் காட்டினார்.



“இன்றைக்கும் சர்வதேச நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் மக்களுக்கு, “நாங்கள் சர்வதேசம் செல்ல தயாரில்லை எனவும், உள்நாட்டு பொறிமுறைக்கமைய விடை கொடுப்போம் எனவும் கூறிவரும் அரசு, இன்னும் ஒரு விடையையும் கொடுக்காமல் உள்ளது. ஆனால் இழப்பீட்டுக்காக வெளிநாட்டு நீதிமன்றத்துக்கு செல்கின்றது, இது உங்களுக்கடைய (ஆட்சியாளர்களின்) இனவாத முகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றது.” - எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியை சந்திக்கின்றோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றியும் கலந்துரையாடப்படும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பது சர்வதேச பொறிமுறையாக இருந்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என எடுத்துரைக்கவுள்ளோம். அவ்வாறு இல்லாவிட்டால் அதில் பயன் இருக்காது.”-எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# நவீன துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, மே. 12

பண்டாரகம, ரைகம பிரதேசத்தில் உள்ள மயானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ஆறு தோட்டாக்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட 98 ரக துப்பாக்கியானது 9:11 ரக 16 தோட்டாக்களை தாங்கக்கூடிய இரண்டு பாதுகாப்பு பூட்டுகளுடன் சீனாவில் தயாரிக்கப்பட்ட விசேட வகை துப்பாக்கியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இதுவரை பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல உணவக உரிமையாளரை சுட்டுக் கொன்றது உள்ளிட்ட பல கொலைகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட புரு மூனா என்ற சங்க டி சில்வா வெளிப்படுத்திய தகவலின் பிரகாரம் மயானம் ஒன்றில் இருந்து இந்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல உணவக உரிமையாளர் கொலையின் பின்னர் வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்ற புரு மூனா, பொலிஸாரிடம் சிக்கி பின்னர் தப்பிச் சென்றார்.

அவர் தப்பித்த பின்னர் பதுங்கியிருந்த பண்டாரகம, ரைகம மல்வத்த பிரதேசத்தில் உள்ள வீட்டுக்கு அருகில் உள்ள மயானத்தில் இந்த துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரான புரு மூனா தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப் பகிஷ்கரிப்பு நேற்று நிறைவு

கொழும்பு, மே. 12

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

நேற்று ரயில் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டதாக ரயில் போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்தது.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று முன் தினம் 24 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

10 அலுவலக ரயில்கள், 6 தபால் ரயில்கள் மற்றும் தூர சேவை ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் நேற்று முன் தினம் சில ரயில் சேவைகள் தாமதமானதாகவும் ரயில்வே பிரதி பொது முகாமையாளர் எம்.ஜே.இதிபொலகே தெரிவித்தார்.

ரயில்வே வணிக பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு ஊழல்வாதி என தெரிவிக்கப்படும் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் ரயில் பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். (அ)

# தம்புள்ளையில் மீட்கப்பட்ட 7000 கிலோ கழிவு தேயிலை

கொழும்பு, மே. 12

தம்புள்ளை பன்னம்பிட்டிய பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7000 கிலோவுக்கும் அதிகமான கழிவு தேயிலையுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

ஒரு தொகுதி கழிவுத் தேயிலையை மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பின்னர் இவை மீட்கப்பட்டன. (அ)

# 16 மாணவிகள் துஷ்பிரயோகம் களுத்துறையில் ஆசிரியர் கைது

கொழும்பு, மே. 12

களுத்துறையில் மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் (வயது-30 ) 16 மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் களுத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று முன் தினம் மாலை வரை பல முறைப்பாடுகள் கிடைத்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வகுப்புக்கு வரும் மாணவிகளை வீட்டுக்கு அழைத்துச் செல்வதாக கூறி, ஆசிரியர் களுத்துறை, லகோஸ்வத்த பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இந்தச் சம்பவங்களை தனது கைத்தொலைபேசியில் பதிவு செய்தும் வைத்துள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் தனது மடிக்கணினியில் அனைத்து பாலியல் வீடியோக்களையும் சேமித்து வைத்திருந்ததை அவரது மனைவி கண்டறிந்து, மாணவிகளின் பெற்றோருக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவாக தொடங்கியது.

சந்தேகத்திற்குரிய கணிதம் கற்பிக்கும் ஆசிரியர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்ற நிலையில் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.

(அ)

# முஸ்லிம், மலையக மக்களின் பிரச்னைகளையும் பேசுவோம்

## ஹரீஸ் எம்.பியிடம் ஜனாதிபதியின் செயலர் உறுதி

கொழும்பு, மே. 12

**வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்னைகளை ஆராய தமிழ் மக்கள் பிரதி நிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் நடைபெறும் பேச்சுவார்த்தை தொடர் போன்று முஸ்லிம் கட்சிகளுக்கும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுக்கும், மலையக மக்களின் பிரச்னை களை ஆராய மலையக மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமான பேச்சுவார்த்தைக் கான சந்திப்பை ஏற்படுத்துவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இரா ஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடனான சந்திப்பில் வலியுறுத்தினார்.**

அந்த சந்திப்பின்போது, வடக்கு, கிழக்கில் வாழும் முஸ் லிம்களின் பிரச்னைகள், முஸ் லிம்களின் வகிபாகங்கள் முஸ் லிம்கள் தொடர்ந்தும் எதிர்நோக் கும் முரண்பாடுகள் தொடர்பில் தீர்வை எட்டும் விதமாக ஜனா திபதியுடன் முஸ்லிம் தரப்பு பேச் சுவார்த்தை செய்யவேண்டிய அவசியத்தையும், மலையக மக் களின் பிரச்னைகளுக்கு மலை யக மக்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை செய் யவேண்டிய அவசியத்தையும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெளிவுபடுத் தினார்.

இந்த பேச்சுவார்த்தை தொடர் களை நீண்டகால தீர்வாக முன் வைக்கும் விதமாக இதய சுத்தி யுடன் ஜனாதிபதி முன்னெ டுத்து வருவதாகவும், தமிழ், முஸ் லிம், மலையக சமூகங்களின் அடிப்படை பிரச்சினைகள், இனப்பிரச்னைகளுக்கான தீர்வை அர்த்தபுஷ்டி மிக்கதாக மாற்ற வேண்டும் என்ற முனைப்பில் இந்த பேச்சுவார்த்தை தொடர் களை ஜனாதிபதி ஆரம்பித்துள் ளதாக இதன்போது தனக்கு பதிலளித்த ஜனாதிபதி செயலா ளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித் தார் என பாராளுமன்ற உறுப்பி னர் எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங் களுக்கு தெரிவித்தார்.

தொடர்ந்தும், தமிழர்களின் பிரச்னை தனித்துவமானது, முஸ் லிங்களின் பிரச்னைகள் தனித்து வமானது, மலையக மக்களின் பிரச்னைகள் தனித்துவமானது என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னை களை ஜனாதிபதி ஆராய அவர் களை இன்று அழைத்துள்ளார். இதேபோன்று முஸ்லிம்களின் பிரச்னைகளை ஆராய முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளையும், முஸ் லிம் கட்சிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை செய்வது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளது டன் மலையக மக்களின் பிரச் னைகளை மலையக தலைவர்க ளுடன் பேச ஜனாதிபதி ஆயத்த மாக உள்ளார். இந்த பேச்சுவார்த் தைகளின் இறுதி வடிவமாக சகல தரப்பினரையும் ஒரே மேசைக்கு அழைத்து இறுதிப்பேச்சு வார்த்தை செய்வது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தைகளில் காணி ஆணைக்குழு அமைத்தல், இனப் பிரச்னைக்கான தீர்வை எட்டுதல் போன்ற முக்கிய விட யங்கள் ஆராயப்பட உள்ளதாக வும், கூடிய விரைவில் ஜனாதிப திக்கும் முஸ்லிம் தரப்பு எம். பிக்களுமிடையிலான பேச்சு வார்த்தை அழைப்பை ஜனாதி பதி செயலகம் விடுக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தனக்கு உறுதியளித் ததாக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் தெரிவித்தார். (அ)

# மன்னாரில் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி



மன்னார், மே. 12

மக்கள் பங்களிப்புடன் மன் னார் மாவட்டத்தில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்திட்டம் நேற்றுக் காலை 8 மணிக்கு மன்னார் மாவட்ட வைத்தியசாலை முன்பாக இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு சென்று அரிசி, விறகு என்பன திரட்டப் பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கப்பட்டு மக்களுக்கு விநி யோகிக்கப்பட்டது.

இனப்படுகொலை இடம்பெற் றவேளை மக்களின் அடிப்படை ஆதாரமாக காணப்பட்ட முள்ளி வாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டுபிரசுரமும் விநியோகிக் கப்பட்டது.

அதிகளவான மக்கள் உணர் வுபூர்வமாக கலந்து முள்ளி வாய்க்கால் கஞ்சியை அருந்திச் சென்றனர்.

அதேவேளை, முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கும் செயற் பாட்டுக்கு மன்னார் மாவட்டத் தில் மக்கள் பேராதரவினை வழங்கியிருந்தனர். (அ)

# காணி கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, மே. 12

நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத் தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதி யான குழுவொன்றினை நியமிக்குமாறும் ஜனா திபதி அறிவுரை வழங்கினார்.

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவ னங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள் வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது உள் ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத் தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையா டலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட காணிச் சட்டங்களே இன்றும் நடை முறையில் உள்ளதெனச் சுட்டிக்காட்டிய ஜனாதி பதி, காணி பயன்பாடுகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பா டுகளுக்கு பொறுத்தமற்றதாக காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணிகளை பெற்றுக்கொடுப்பதில் காணப்படுகின்ற சிக்கல் களை நீக்கி புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இங்கு தீர்க்கமாக ஆராயப்பட்டது.

அதற்காக காணி ஆணைக்குழுவின் ஊடாக மாகாண சபை காணிகள் தொடர்பிலான பிரச்னை களை நிவர்த்திக்குமாறும், கிராம சேவகர் பிரிவு கள் மட்டத்தில் காணப்படுகின்ற காணி உரிமை யாளர்களின் விவரம் மற்றும் பயன்படுத்தப்பட் டுள்ள காணிகள் மற்றும் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்ற காணிகள் தொடர்பில் கண்டறிந்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் தேவைகளுக்காக கையகப்படுத் தப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற காணி களை உரிமையாளர்களுக்கு மீளக் கையளிக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறும், எதிர்காலத்தில் அர சாங்கத்தின் தேவைகளுக்காக காணிகளை கைய கப்படுத்தும்போது சந்தை பெறுமதியை செலுத்தி அவற்றை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா றும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதன்போது நில அளவைத் திணைக்களம் மற் றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களங்களில் காணப்படும் தாமதங்களை நிவர்த்திப்பதற்காக அவற்றின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசிய மான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கு மாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார். (அ)

# மூடிய அறையில் கடந்த வாரம் ரணில்-பஸில் முக்கிய சந்திப்பு

கொழும்பு, மே. 12


ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் பொதுஜன பெரமு னவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடை யில் கடந்த வாரம் மூடிய அறைக் குள் முக்கிய சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

அதில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்டபோதிலும் முக்கிய மாக ஜனாதிபதித் தேர்தல் பற் றித்தான் அதிகம் பேசப்பட்டது எனத் தெரியவருகின்றது.

அதில் பல யோசனைகளை பஸில் முன்வைத்தார் எனவும் அறியமுடிகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்த லில் ரணிலையே மொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத் துதல், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குதல் உள்ளிட்ட பல ஆலோசனை களை ரணிலிடம் பஸில் முன் வைத்தார் எனவும் தெரியவரு கின்றது. (அ)

# சிவப்புச் சீனி இறக்குமதிக்கு 160 மில்லியன் ரூபா அபராதம்



கொழும்பு, மே. 12

சட்டவிரோதமான முறை யில் 607.5 மெற்றிக் தொன் சிவப்பு சீனியை இறக்குமதி செய்த குற்றச் சாட்டின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட நிறுவ னம் அதற்கான அபராதத் தொகையை திறைசேரிக்கு செலுத் தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்தார்.

குறித்த அபராதத் தொகை யான 160 மில்லியன் ரூபாவை திட்டமிட்டபடி நிறுவனம் செலுத்தியுள் ளதாக அமைச்சர் கூறினார்.

கடந்த ஜனவரி 9ஆம் திகதி தடை செய்யப்பட்ட சிவப்புச் சீனியை வெள்ளைச் சீனி என்று கூறி இறக்கு குமதி செய்தபோது அது சுங்க அதிகாரிகளால் கண் டுபிடிக்கப்பட்டது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ஜனக ரத்நாயக்க போட்டி?



கொழும்பு, மே. 12

பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க 2024 ஜனா திபதித் தேர்தலில் போட்டி யிடவுள்ளார் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் அவர் பேசுபொருளாகத் திகழ்ந்தவர். மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழுதும் மாணவர்க ளுக்காக மின்வெட்டை நிறுத்துமாறு கூறியும் அவர் மக் கள் பக்கம் நின்று செயற்பட்டார்.

இதற்காக அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக் கவும் உள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன. (அ)

# பிரிட்டன் உள்ளூராட்சி தேர்தலில் தமிழரான ஜெய்கணேஷ் வெற்றி

லண்டன் ,மே. 12

பிரித்தானியாவில் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமி ழர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டி யிட்ட ஜெய்கணேஷ் என்பவர் லேபர் கட்சி மற்றும் லிபரல் கட்சி வேட்பாளர்களைத் தோற்கடித்து அபார வெற்றி பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ஜெய்கணேஷ், லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலை யில் சர்வதேச சுற்றுலா தொடர்பில் பட்டப் படிப்பு முடித்தவர்.

அவர் தனது வெற்றி குறித்து தெரிவிக்கை யில்- கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டி யிட்ட என் மீது நம்பிக்கை வைத்து வாக்க ளித்த மக்களுக்கு நன்றி. எனக்கு வாக்களித்த மக்களின் நலனுக்காக அக்கறையுடன் செயல் படவுள்ளேன் -என்றார். (அ)

# ஆபத்தான சூழ்நிலை நாட்டில் உருவாகிறது

## சபையில் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, மே. 12

**நாட்டில் மிகவும் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருவதாகவும், சமூக செயற்பாட்டாளர் நிகேஷல மீது கடுவலை முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்ன ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலுடன் சேர்ந்து தாக்குதலை நடத்தியாதவும், குறித்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தாக்கியவர்கள் என இரு தரப்பினரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியல் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன. அவர்களைக் கவனமாக இருக்குமாறு பல்வேறு அச்சுறுத்தல் ரீதியிலான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு



வருகின்றன. போராட்டத்தில் ஈடுபட்ட சகலரும் தாக்குதல்களுக்கும், உயிர் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியுள்ளனர்.

அத்துடன், இப்போராட்டத்தின் பக்கவிளைவுகளின் பயனாகவே தற்போதைய ஜனாதிபதியும் பதவிக்கு வந்துள்ளதால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் தலையிடவேண்டும் -என்றார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு நான்காம் கட்ட நட்டஈடு

கொழும்பு, மே. 12

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்டஈடாக சுமார் 160.5 கோடி ரூபாய்க்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் பங்கேற்புடனும் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சின் முயற்சியினால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்த 15,000 கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த தொழிலை வாழ்வா



தாரமாக கொண்டிருந்த சுமார் 5,000 பேருக்கான நட்டஈடு இம்முறை வழங்கப்படவுள்ள நிலையில், நேற்று 30 பேருக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு காசோலைகள், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

குறித்த கப்பல் விபத்தினால் கடலில் கலக்கப்பட்ட பல்வேறு கழிவுப் பொருட்களினால் வலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக 20 கடற்றொழிலாளர்களுக்கு கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈடுத் தொகையும் இதன்போது வழங்கப்பட்டது. (அ)

# போலியான இத்தாலி வீஸாக்கள் மூலம் ஆட்கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது!

கொழும்பு, மே. 12

போலி இத்தாலி விசா மூலம் ஆட்கடத்தலில் ஈடுபட முயன்ற இருவர் கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த அதிகாரிகள் போலி விசா மூலம் இத்தாலிக்குச் செல்ல முயன்ற இருவரை விமான நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தியதில் இந்த கடத்தல் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கடத்தல்காரர்கள் இத்தாலி விசாவிற்காக 25 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவை திருடிச்சென்ற உரிமையாளர்!

கொழும்பு, மே. 12

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவைத் திருடிய சந்தேகநபர் ஒருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஓட்டோ சான்றுப் பொருளாக பெயரிடப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, கடந்த 9 ஆம் திகதி திருடப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

குறித்த நபர் அந்த வாகனத்தின் உரிமையாளர் எனவும், அவர் தன்னிடமிருந்த உதிரிச்சாவியை பயன்படுத்தி ஓட்டோவை பொலிஸ்நிலையத்தில் இருந்து எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்த பொலிஸார், சந்தேக நபரை கைது செய்தனர். (அ)

# கிளிநொச்சி பகுதியில் தாக்குதல் முயற்சி; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கைது!

கிளிநொச்சி, மே. 12

கிளிநொச்சி, புளியம்பொக்கணை பகுதியில் தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் இருந்து கடந்த மே 9 ஆம் திகதி அதிகாலை கூரிய ஆயுதங்களுடன் மூவர் புளியம்பொக்கணை கள வெட்டித்திடல் பகுதியில் வசிக்கும் ஒருவரை தாக்குவதற்காக சென்றுள்ளனர்.

அவர்கள் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்ட நிலையில் அதில் இருவர் தப்பிச் சென்றுள்ளனர். மக்களால் பிடிக்கப்பட்டவர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து வாள் ஒன்றும், இரும்புக் கம்பி மற்றும் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அவர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# காதலனுடன் தங்குவதற்கு சிறுமிக்கு அறை வழங்கிய விடுதி முகாமையாளர் மறியலில்!

கொழும்பு, மே. 12

காதலனுடன் இரவைக் கழிக்க சிறுமியொருவருக்கு விடுதியில் அறையொன்றை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உஸ்வட்கெயாவ பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றின் முகாமையாளரும், குறித்த சிறுமியின் காதலனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வெலிசறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியைச் சேர்ந்த விடுதி முகாமையாளரும், சிறுமியின் காதலன் எனக் கூறப்படும் ராகமையைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞனுமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவியான தமது மகளை இளைஞர் ஒருவர் அழைத்துச் சென்றதாக சிறுமியின் தாயார் கடந்த 8ஆம் திகதி தமக்கு முறைப்பாடு செய்ததாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளையடுத்து சிறுமியின் காதலன் என கூறப்படும் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி, உஸ்வட்டகெயாவ பிரதேசத்தில் உள்ள அழகு சாதன நிலையமொன்றிலிருந்து குறித்த சிறுமியும் கண்டுபிடிக்கப்பட்டார்.

சிறுமியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இவ்விருவருக்கும் விடுதியில் அறையொன்றை வழங்கியதாக கூறப்படும், குறித்த விடுதி முகாமையாளரும் கைது செய்யப்பட்டார். (அ)

# அடியிலிருந்து தப்ப அப்படி நடித்தேன்!

## மகிந்தவின் சகா கூறுகின்றார்

கொழும்பு, மே. 12

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டு, சமூக ஊடகங்களில் புகழடைந்தவர்களில் ஒருவரான கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மகிந்த கஹந்தகம, அந்த நாட்களை நினைவு கூர்ந்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கையில் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தபோது, உயிர் பிழைப்பதற்காகவும் அனுதாபத்துக்காகவும் அப்படி நடித்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே 9 அன்று, மகிந்த கஹந்தகமவின் கோலம் இணையம் முழுவதும் வைரலானது. அது நடிப்பு என தற்போது அவர் கூறுகிறார்.

அடிக்கப்படும்போது தான் ஒரு செயலைச் செய்ததாக அவர் கூறினார்.

அத்துடன், தன்னை புகழடைய வைத்து, தன்னை அரசியல் தலைவராக்கியதற்காக அரகலயவுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"அரகலயவின் பின்னர் நடந்தவற்றின் காரணமாக நான் மிகவும் பிரபலமாகிவிட்டதால் எனக்கு



எந்த விளம்பரமும் தேவையில்லை" என்று கஹந்தகம கூறினார்.

அரகலய தொடர்பில் கருத்து தெரிவித்த கஹந்தகம, இது ஒரு சதி எனவும் செயற்பாட்டாளர்கள் அதனை கண்டுகொள்ளாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தான் பேர வாவியில் குளிப்பது பழக்கமான விடயம் எனவும், அது தனக்கு புதிதல்ல என்றும் அவர் கூறினார்.

# மணிப்பூர் கலவரத்தின் தற்போதைய நிலவரம்: 7 கேள்விகள்; 7 பதில்கள்!

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான பாதுகாப்புப்படையினர் விழிப்புடன் கண்காணிப்புக்காக நிறுத்தப் பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக அங்கு ஏற்பட்ட கலவரம் மற்றும் இன மோதல்களால் குறைந்த பட்சம் 52 பேர் கொல்லப்பட்டனர். 35,000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அந்த மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

மியான்மரின் எல்லையில் உள்ள மாநிலத்தில் மே 3 அன்று பழங்குடியினர் குழுக்கள் பழங்குடியினரல்லாத குழுவான, பெரும்பான்மை இனத்தவரான மெய்தெய் உடன், பொருளாதார நன்மைகள் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் தொடர்பாக மோதலில் தொடங்கியது.

வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில் பெரும்பான்மையாக வாழும் மெய்தெய் சமூகத்திற்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

இது தொடர்பாக பழங்குடியினரும், மெய்தெய் சமூகத்தினரும் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் நடத்தியது வன்முறையாக மாறியது.

இந்த வன்முறை மாநிலம் முழுவதும் பரவி வாகனங்கள், வீடுகள், கல்வி நிலையங்கள் உள்ளிட்ட ஏராளமான கட்டிடங்களுக்கு தீ வைக்கப்பட்டன. ஏன் இந்த வன்முறை என்பதைப் புரிந்து கொள்ள 7 கேள்விகளையும், அவற்றிற்கான பதில்களையும் தெரிந்து கொள்வோம்.



**1. மணிப்பூரின் புவியியல் மற்றும் சமூக அமைப்பு என்ன?**

மணிப்பூரின் மக்கள்தொகை சுமார் 30 முதல் 35 லட்சம் வரை இருக்கும். இங்கு மெய்தெய், நாகா மற்றும் குகி என்ற மூன்று பெரிய சமுதாய மக்கள் வாழ்கின்றனர்.

மெய்தெய் சமூகத்தினரில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள். அவர்களில் இஸ்லாமியர்களும் இருக்கின்றனர். மெய்தெய் சமூகத்தின் குடிமக்களின் விகிதம் மக்கள் தொகையில் அதிகமாக உள்ளது. நாகர்கள் மற்றும் குக்கிகள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக உள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, 60 பேரில் 40 பேர் மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மீதமுள்ள 20 பேர் நாகா மற்றும் குகி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதுவரை, மணிப்பூரின் முதலமைச்சர்களாக பதவி வகித்த 12 பேரில், இருவர் மட்டுமே பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்கள்.

மணிப்பூரின் புவியியல் அமைப்பு ஒரு கால்பந்து மைதானம் போல் உள்ளது. இம்பால் பள்ளத்தாக்கு அந்த கால்பந்து மைதானத்தில் உள்ள விளையாடும் இடத்தைப் போன்றது.

விளையாட்டு மைதானத்தின் நான்கு புறமும் உள்ள பார்வையாளர் அமரும் இடங்களைப் போன்று இந்த மாநிலத்தைச் சுற்றிலும் மலைப்பாங்கான பகுதி உள்ளது. மாநிலம் முழுவதும் 10 சதவீத நிலங்கள் மெய்தெய் சமூகத்தினர் வசம் உள்ளன.

இம்பால் பள்ளத்தாக்கில் மெய்தெய் சமூகத்தினர் பெரும்பாலான எண்ணிக்கையில் வசிக்கின்றனர். மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள 90 சதவிகித நிலங்கள் பழங்குடியினர் வசம் உள்ளன.

**2. உண்மையில் எதிர்ப்பும் வன்முறையும் ஏன் ஏற்பட்டன?**

மணிப்பூரில் 34 பழங்குடியினர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் நாகா மற்றும் குகி சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

மாநிலத்தில் பெரும்பான்மையாக அதாவது 64 சதவீத மக்கள்தொகை கொண்ட மெய்தெய் சமூகம், பட்டியல் பழங்குடி அந்தஸ்து கோருகிறது. இந்தக் கோரிக்கை பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்த நிலையில், மெய்தெய் சமூகத்தினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.



அதில் கடந்த மாதம் உயர்நீதிமன்றம் அளித்த புதிய தீர்ப்பால் இடஒதுக்கீடு விவகாரம் மீண்டும் விவாதத்துக்கு வந்தது.

மணிப்பூர் உயர் நீதிமன்றம், ஏப்ரல் 19 அன்று தனது உத்தரவில், பட்டியலிடப்பட்ட பழங்குடியினரில் உள்ள மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நிலையை நான்கு வாரங்களுக்குள் பரிசீலிக்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது.

மேலும், இதை பரிசீலிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமாறும் மாநில அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தலைநகர் இம்பாலில் இருந்து 65 கிமீ தொலைவில் உள்ள சுராசந்த்பூர் மாவட்டத்தின் டோர்பாங்கில் கடந்த 3-ம் தேதி அனைத்து பழங்குடியின மாணவர் சங்கம் மணிப்பூர் பேரணிக்கு ஏற்பாடு செய்தது.

“ஆதிவாசி ஏக்தா மார்ச்” என்ற பெயரில் இந்த பேரணி நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அதே நேரத்தில் வன்முறையும் தொடங்கியதாக கூறப்படுகிறது.

சுராசந்த்பூர் மாவட்டத்தைத் தவிர, சேனாபதி, உக்ருல், காங்போக்பி, தமெங்லாங், சண்டேல் மற்றும் தெங்னௌபால் உள்ளிட்ட அனைத்து மலைப்பகுதிகளிலும் இத்தகைய கூட்டங்களும் அணிவகுப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஒரு மூத்த காவல்துறை அதிகாரியின் கூற்றுப்படி, டார்பந்தில் இதேபோன்ற அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான பழங்குடியினர் திரண்டபோது பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர்களுக்கு இடையே மோதல் வெடித்தது.

**3. மெய்தெய் சமூகத்திற்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் இடையே உள்ள முரண்பாடு என்ன?**

மணிப்பூர் மக்கள்தெகை 30 லட்சம் - 35 லட்சம். இதில் மெய்தெய் சமூகத்தினர் 64 சதவீதமாக உள்ளனர். இவர்கள் இம்பால் பகுதியில் வசிக்கின்றனர்.

மெய்தெய் சமூகத்தை ஒரு பட்டியலின பழங்குடியாக அறிவிப்பதை எதிர்க்கும் பழங்குடியினரில் குகி என்ற ஒரு குழுவும் உள்ளது. இதில் பல பழங்குடியினர் அடங்குவர்.

மணிப்பூரின் முக்கிய மலைப்பகுதிகளில் வசிக்கும் குகி பழங்குடியினரின் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதம் ஆகும்.

எனவே, மெய்தெய் சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு வழங்கினால், அந்த சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் பலனடைவார்கள் என்பதால், அரசு வேலை, கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்காமல் போய்விடும் என மலைவாழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மணிப்பூரில் நடந்த சமீபத்திய வன்முறை சம்பவங்கள், மாநிலத்தின் சமவெளிகளில் வாழும் மெய்தெய் குழுவிற்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் இடையே பழைய வகுப்புவாத மோதலை மீண்டும் கிளப்பியுள்ளது.

1949 இல் மணிப்பூர் இந்தியாவுடன் இணைந்ததற்கு முன்பு, ஒரு பட்டியல் பழங்குடி என்ற அந்தஸ்து இருந்ததாகவும், இருப்பினும், இணைப்புக்குப் பிறகு அது முடிவுக்கு வந்ததாகவும் மெய்தெய் இனத்தினர் கூறுகின்றனர்.





மியான்மர் மற்றும் வங்கதேசத்தில் இருந்து பெரிய அளவிலான சட்டவிரோத குடியேற்றத்தால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

**4. மெய்தெய் சமூகத்திற்கு பழங்குடியின அந்தஸ்து வழங்குவதில் சர்ச்சை ஏன்?**

நீதிமன்றம் மாநில அரசுக்கு ஒரு கருத்தை அளித்துள்ளது. ஏனெனில் மணிப்பூரில் மெய்தெய் சமூகத்தினர் நீண்ட காலமாக பழங்குடியினர் அந்தஸ்து கோரி வருகின்றனர்.

இந்த கோரிக்கை மெய்தெய் குழுவை பிளவுபடுத்தியுள்ளது. மெய்தெய் மக்களில் ஒரு பகுதியினர் இக்கோரிக்கையை ஆதரிக்கின்றனர். சிலரிடம் எதிர்ப்பு இருப்பதாகவும் மூத்த பத்திரிகையாளர் பிரதீப் பன்ஜோபம் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், “பட்டியலின பழங்குடியினர் கோரிக்கைக் குழு கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகிறது. ஆனால் இந்த கோரிக்கையை எந்த அரசும் நிறைவேற்றவில்லை. அதனால் இந்தச் சமூகம் நீதிமன்றத்துக்குச் சென்றது.

இந்த கோரிக்கையை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு மாநில அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் இதன் காரணமாக அனைத்து பழங்குடியின மாணவர் சங்கம் மணிப்பூர் போராட்டத்தை தொடங்கியது.

மெய்தெய் சமூகம் ஏற்கனவே பிற பட்டியலின சமூகங்களுடன் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டைப் பெற்றுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூகம் கூறுகிறது.

இந்நிலையில் மெய்தெய் சமூகத்தினர் அதனையும் பெற முடியாது என்றும், அவர்கள் பழங்குடியினர் அல்ல என்பதுடன், எஸ்சி, ஓபிசி மற்றும் பிராமணர்களுக்கான சமூக அந்தஸ்த்தையே பெறமுடியும் என பழங்குடி சமூகம் கூறுகிறது.

மெய்தெய் சமூகத்தினருக்கு பழங்குடியினர் அந்தஸ்து அளித்தால், அது பழங்குடியினர் நிலங்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்றும் அதனால் அவர்களை ஆறாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூகம் கூறுகிறது.

**5. தவறான தகவல் மற்றும் வதந்திகளால் வன்முறை தூண்டப்பட்டதா?**

மணிப்பூரின் மூத்த பத்திரிகையாளர் யும்னம் ருப்சந்திரா சிங் பேசுகையில், ‘மணிப்பூரில் உள்ள தற்போதைய அமைப்பைப் பார்க்கும்போது, மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மலைப்பாங்கான பகுதிகளுக்குச் சென்று வாழ முடியாது என்றும், 22 ஆயிரத்து 300 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 8 முதல் 10 சதவீதம் மட்டுமே சமவெளிப்பகுதியாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

மெய்தெய் இன மக்களுக்கு பழங்குடி அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீதிமன்றத்தை நாடிய குழுவின் கூற்றுப்படி, அவர்களின் கோரிக்கை வேலை, கல்வி அல்லது வரி விலக்கு மட்டுமல்ல. பூர்வீக நிலம், கலாசாரம் மற்றும் பாரம்பரிய அடையாளத்தை பாதுகாக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது.

ரூப்சந்திரா பேசியபோது, பழங்குடியினர் அந்தஸ்து விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தின் கருத்து தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது என்றும், மெய்தெய் சமூகத்தினருக்கு பழங்குடி அந்தஸ்து வழங்கவேண்டும் என புரிந்துகொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

**6. முதல்வர் பிரேன் சிங் ஏன் விமர்சனத்திற்கு உள்ளானார்?**

வன்முறைக்குப் பின்னால் வேறு காரணங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. மணிப்பூர் அரசாங்கத்தின் ஆதரவாளர்களின் கூற்றுப்படி, முதல்வர் பிரேன் சிங், அபின் சாகுபடியை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பதாகவும், இந்த முயற்சி வெற்றி பெற்றால், அது பழங்குடியினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் மியான்மர் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக மணிப்பூருக்கு வந்து குடியேறுபவர்களுக்குத் தடை ஏற்படும் என்றும் இது தொடர்பான அச்சத்தின் காரணமாக அவரைப் பதவியில் இருந்து அகற்ற சதி நடப்பதாகவும் தெரிய வருகிறது.

**7. இதுவரை எத்தனை பேர் உயிர் இழந்திருக்கிறார்கள்?**

இடஒதுக்கீடு பிரச்னையில் தொடங்கிய மோதலில் இதுவரை 52 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இருப்பினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை. (பிபிசி)

# பாகிஸ்தானில் என்ன நடக்கிறது? இம்ரான் கான் ஏன் கைது செய்யப்பட்டார்?

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்திற்கு வெளியே பாதுகாப்புப் படையினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

இம்ரான் கான் கைது தொடர்பாக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது, நகர காவல்துறை தலைவர் அக்பர் நாசிர் நீதிமன்றத்தில் ஆஜராகி, ஊழல் வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இம்ரான் கான் கைதுசெய்யப்படலாம் என்ற ஊகம் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இந்த வழக்கின் பின்னணியில் உள்ள காரணங்களைப் புரிந்துகொள்ள பிபிசி உருது சேவையின் ஆசிரியர் ஆசிஃப் ஃபரூக்கியிடம் உரையாடியபோது:



**இம்ரான் கான் எதற்காகக் கைது செய்யப்பட்டார்?**

கேள்வி- இம்ரான் கான் கைது தொடர்பான பேச்சு நீண்ட நாட்களாக இருந்து வந்த நிலையில், அவர் ஏன் திடீரென கைது செய்யப்பட்டார்?

பதில்- இது திடீரென நடந்ததல்ல. பின்னணியில் நடவடிக்கை நடந்து கொண்டுதான் இருந்தது. பாகிஸ்தானில் ஊழலைத்தடுக்கும் பொறுப்பு உள்ள நிறுவனம் தேசிய பொறுப்புடைமை பணியகம். அந்நிறுவனம் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அவரை நேரில் ஆஜராகுமாறும், சில கேள்விகளுக்கு பதில் அளிக்குமாறும் கேட்டிருந்தது. அதற்கு அவர் பதிலளிக்காததால் படிப்படியாக விஷயம் கைது வரை சென்றது.

இந்த விவகாரம் இம்ரான் கான் பிரதமராக இருந்த காலத்தில் நிகழ்ந்தது. அப்போது அவர் ஆன்மிகம் மற்றும் சூஃபித்துவத்தில் பணியாற்றுவதற்காக பாகிஸ்தானிலிருக்கும் பஞ்சாப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ அனுமதி அளித்தார்.

அந்தப் பல்கலைக்கழகத்தைக் கட்ட பஞ்சாப் அரசு நிலங்களை வாங்கியது. அந்த நிலத்தை வாங்குவதில் இம்ரான் கானும் அவரது மனைவியும் மோசடி செய்ததாக தேசிய பொறுப்புடைமை பணியகம் கூறுகிறது. சட்டவிரோதமாக நிலம் வாங்கப்பட்டதால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் சில மாதங்களுக்கு முன் இம்ரான் கான் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்தது.

**இம்ரான் கானுக்கு ஜாமீன் கிடைக்குமா?**

கேள்வி- தேசிய பொறுப்புடைமை பணியகத்தின் கட்டுப்பாடு யார் கைகளில் உள்ளது மற்றும் அது எவ்வாறு செயல்படுகிறது?

பதில்- தேசிய பொறுப்புடைமை பணியகம் சில ஆண்டுகளாக சர்ச்சைக்குரிய அமைப்பாக மாறியுள்ளது.

இது பர்வேஸ் முஷாரப் பதவிக்காலத்தில் உருவாக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர்களின் வாயை அடைக்க அவர் இந்த அமைப்பை பயன்படுத்தினார்.

இந்த அமைப்பிடம் நிறைய அதிகாரங்கள் இருந்தன. தேசிய பொறுப்புடைமை பணியகம் ஒருவரை கைது செய்த பின்னர் அவரை 60 நாட்களுக்கு தன் காவலில் வைத்திருக்க முடியும்.

இம்ரான் கான் ஆட்சியின் போது பாகிஸ்தான் முஸ்லீம் லீக் தலைவர்களும் இதன் காவலில் இருந்துள்ளனர். இதில் நவாஸ் ஷெரீப் மற்றும் மரியம் நவாஸ் ஆகியோரும் அடங்குவர்.

ஆனால் இம்ரான் கானின் அரசு வெளியேறிய பிறகு, இந்த அமைப்பிற்கு பரந்த அதிகாரங்கள் இருப்பதாகவும், அதன் உதவியுடன், எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் கருதிய புதிய அரசு, அதன் அதிகாரங்களைக் குறைத்துள்ளது.

இன்றைய தேசிய பொறுப்புடைமை பணியகம் ஒரு வருடத்திற்கு முன்பிருந்ததை விட மிகக் குறைவான அதிகாரங்களோடு செயல்படுகிறது. எல்லா அரசுகளும் தங்கள் அரசியல் திட்டங்களை நிறைவேற்ற இந்த அமைப்பை பயன்படுத்தியுள்ளன.

கேள்வி- இம்ரான் கானுக்கு என்னென்ன சட்ட வழிகள் உள்ளன. இதற்கு முன்பும் பலமுறை அவர் நீதிமன்றத்தில் நிவாரணம் பெற்றுள்ளார். இந்த முறை என்ன நடக்கும்?

பதில்- இது சட்ட விஷயத்தைக்காட்டிலும் அரசியல் ரீதியான விஷயமாகும். சட்டரீதியாக, அவர் தொடர்ந்து நிவாரணம் பெறுகிறார். ஆனால் பின்னர் புதிய வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

நான் கூறியது போல், தேசிய பொறுப்புடைமை பணியகத்தின் சட்டங்கள் கடந்த ஆண்டு இருந்ததைப்போல இப்போது வலுவாக இல்லை.

முன்பெல்லாம் ஜாமீன் கிடைப்பதே சிரமம். சிலருக்கு இரண்டு ஆண்டுகள் கூட ஜாமீன் கிடைக்காமல் இருந்துள்ளது.

ஆனால் ஒப்பீட்டளவில் இப்போது இம்ரான் கானுக்கு ஜாமீன் கிடைப்பது எளிது.

ஆனால் பாகிஸ்தானில் அரசியல்வாதிகளுக்கு எதிரான ஊழல் வழக்குகளை சட்ட அடிப்படையில் மட்டும் அல்லாமல் அரசியல் பின்னணியிலும் பார்க்க வேண்டும்.

இதற்குப் பிறகுதான் விஷயம் எங்கு முடியும் என்பதை நீங்கள் யூகிக்க முடியும்.

இம்ரான் கான் விஷயத்தில் கூட, சட்ட விவாதம் அவ்வளவு முக்கியமில்லை. உண்மையில் அரசியல் சூழ்நிலை முழு விஷயத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**இம்ரான் கானை நீதிமன்றம் ஆதரிக்கிறதா?**

கேள்வி- பாகிஸ்தானில் அவரது சொந்தக் கட்சியைத் தவிர இம்ரானுடன் யார் இருக்கிறார்கள்? அவருக்கு எதிராக யார் உள்ளனர்? உதாரணமாக, ராணுவம், நீதித்துறை மற்றும் பிற அரசியல் குழுக்களின் நிலைப்பாடு என்ன?

பதில்- இம்ரான் கான் ஆட்சியில் இருந்து வெளியேறியதில் இருந்து அவருக்கு நீதிமன்றத்தின் ஆதரவு அதிகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

நீதிமன்றத்தில் விசாரணை நடத்தும் நீதிபதி கூட தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் ஆதரவாளர் என்றும் இம்ரான் கானுக்கு ஆதரவாக தீர்ப்புகளை வழங்குவதாகவும், இம்ரான் கானின் அரசியல் எதிரிகள் கூறத் தொடங்கியுள்ளனர்.

இதற்கு முன்பும் இம்ரானை கைது செய்ய பல முயற்சிகள் நடந்தன. ஆனால் நீதிமன்றத்தின் மூலம் அவருக்கு முன்னெப்போதும் இருந்திராத அளவிற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜராகும் வரை அவரது கைது வாரண்டை நீதிமன்றங்கள்



நிறுத்தி வைத்துள்ளன. நீதிமன்றத்தில் ஆஜரான போதெல்லாம் அவருக்கு ஜாமீன் கிடைத்துள்ளது.

இனி அரசியல் விவகாரங்களில் தலையிடுவதை குறைத்துக்கொள்ளப் போவதாகப் பாகிஸ்தான் ராணுவம் ஓராண்டுக்கு முன்பு வரை கூறி வந்தது.

கடந்த ஒன்றரை வருடங்களில் ராணுவம் அரசியலில் இருந்து தன்னை வெகுவாக ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால் பாகிஸ்தானின் அதிகார வட்டங்களில் இதனால் ஏற்பட்ட வெற்றிடம் நீதிமன்றங்களால் நிரப்பப்பட்டுள்ளது.

நீதிமன்றம் இம்ரான் கானுக்கு நிறைய நிவாரணம் கொடுப்பதால் மக்கள் முன் இம்ரான் தன்னை நிலைநிறுத்திக் கொள்வது போல் தெரிகிறது. ராணுவத்தில் தனக்கு ஆதரவானவர்கள் இருப்பதாகவும், நீதிமன்றத்தின் ஆதரவு தனக்கு கிடைத்து வருவதாகவும் அவர் கூறுகிறார்.

இம்ரான் கான் பாகிஸ்தானின் சாதாரண அரசியல்வாதிகளைப் போல் இல்லை. அவர் ஒரு அசாதாரண சக்தியைப் பெற்றுள்ளார், அதை அவர் நன்றாகப் பயன்படுத்துகிறார்.

**இம்ரான் கானின் அரசியல் செல்வாக்கு**

கேள்வி- இந்தக் கைது நடவடிக்கையின் அரசியல் விளைவு என்னவாக இருக்கும்? அரசுக்கும் இம்ரானுக்கும் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும். பாகிஸ்தானில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. ஆனால் தற்போதைய நிலவரத்தை பார்க்கும் போது, தேர்தல் நடக்குமா? உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று இம்ரான் கான் நீண்ட நாட்களாக கோரி வருகிறாரே?

பதில்- இந்தக் கைதின் விளைவு என்னவாக இருக்கும் என்பது அது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைப் பொறுத்தது. ஒரு மாதத்திற்குள் ஜாமீனில் வெளியே வந்தால் அது அவரது அரசியலை மேலும் வலுவாக்கும்.

ஆனால் தேர்தல் முடியும் வரை அவர் சிறையில் இருந்தால் அது தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சிக்கு தோல்வியை கொடுக்கக்கூடும். தெஹ்ரீக்-இ-இன்சாப் பாகிஸ்தானின் மற்ற கட்சிகளைப் போலல்லாமல் ஒரு தனிநபர் கட்சி.

இம்ரான் கான் சாலைக்கு வரும்போது மக்களும் வெளியே வருகிறார்கள். அவர் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லவில்லை என்றால், அது பிடிஐ கட்சிக்கு மிகவும் கடினமான நேரமாக அமையும். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன - முதலில், வேட்பாளர்களுக்கு டிக்கெட் கொடுக்கும் போது கட்சி நிறைய சிக்கல்களைச் சந்திக்கும். இரண்டாவதாக, இம்ரான்கான் மக்கள் மத்தியில் இல்லையென்றால் கட்சி பின்னடைவை சந்திக்க நேரிடலாம்.

**பங்குச் சந்தையில் தாக்கம்**

இம்ரானின் கைது பாகிஸ்தானின் பங்குச் சந்தை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

செவ்வாயன்று பங்குச் சந்தை குறியீடு 400 புள்ளிகளுக்கு மேலான சரிவுடன் முடிந்தது.

நாட்டின் அரசியல்-பொருளாதார சூழ்நிலையால் பங்குச்சந்தை ஏற்கனவே அழுத்தத்தில் இருந்ததாகவும், தற்போது இம்ரான் கான் கைது செய்யப்பட்டதால் அது மேலும் சரிந்துள்ளதாகவும் பங்குச் சந்தை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். சந்தையில் கொந்தளிப்பு நிலவியது. ஒரு மணி நேரத்திற்குள் பங்குகளை விற்கும் அலைமோதல் தொடங்கியது.

இம்ரான் கானின் கைது நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை அதிகரித்து, பங்குச் சந்தையில் மோசமான விளைவை ஏற்படுத்தும் என பங்குச் சந்தை தரகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



# உள்ளூராட்சி தேர்தல் ரிட் மனு விசாரணைக்காக ஒத்திவைப்பு

கொழும்பு, மே 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனு மீதான பரிசீலனையை செப்ரெம்பர் 04ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை உத்தரவிட்டது.

ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ. எம். ஆர். விஜயசுந்தர தாக்கல் செய்த குறித்த மனு, நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன, ஏ. எச். எம். டி. நவாஸ் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, தேசிய தேர்தல் ஆணைக்குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளால் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், தேர்தலுக்கான திகதியை தமது சேவை பெறுநர் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று மன்றுக்கு அறியப்படுத்தினார்.

மேலும், திறைசேரியில் தேவையான நிதி உள்ளதா அல்லது இது குறித்த உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆகியவற்றில், முதலில் வரும் விடயத்தின் அடிப்படையில் புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்ததை அடுத்தே, மனு ஒத்திவைக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முழு நாடும் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஐ)

# ஜனநாயக போராட்டத்தை தாக்கியவர்கள் ஜனாதிபதி ரணிலின் கீழ் தற்போதுள்ளனர்!

## சுமந்திரன் எம். பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மே 12

காலி முகத்திடல் ஜனநாயக போராட்டத்தை வன்முறையாக மாற்றியமைத்த தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உள்ளார்கள். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷர்களின் ஆதரவாளர்கள்தான் அமைதி வழி போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆகவே, போராட்டத்தை தற்போது விமர்சிப்பது பயனற்றது என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாடு கடந்த ஆண்டு போராட்டத்தின் ஊடாக பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி காலி முகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெற்ற ஜனநாயக போராட்டம் மே 09 ஆம் திகதிக்கு பின்னர் தான் வன்முறையாக மாற்றமடைந்தது. ஜனநாயக போராட்டத்தை வன்முறையாக யார் மாற்றியது என்பது தொடர்பில் ஆராய வேண்டும். போராட்டத்தை ஆளும் தரப்பினர் அவரவர் எண்ணம் போல் விமர்சிக்கிறார்கள்.

ஆனால், உண்மையை மறைத்து விடுகிறார்கள். மே 09 காலை அலரி மாளிகையில் அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஒன்று கூடிய தரப்பினர் காலி முகத்திடலுக்கு விரைந்து சென்று அமைதி வழி போராட்டகாரர்கள்மீது வன்மையான முறையில் தாக்குதல் நடத்தினார்கள்.

காலி முகத்திடல் போராட்டக்களத்தின்மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தினால் அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது ருவிற்றர் பதவி ஊடாக செய்தி வெளியிட்டார். ஆனால், தாக்குதல் மேற்கொண்டவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

காலி முகத்திடல் ஜனநாயக போராட்டத்தை வன்முறையாக மாற்றியமைத்த தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தற்போது உள்ளார்கள் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். ஆகவே போராட்டம் (அறகலய) விமர்சிப்பது பயனற்றது - என்றார்.

(ஐ)

# முதலீடுகளுக்கு ஒரு வாரத்தில் அனுமதி வழங்க பொறிமுறை!

## இராஜாங்க அமைச்சர்

கொழும்பு மே 12

முதலீட்டு அனுமதியை ஏழு நாட்களில் நிறைவு செய்வதற்கான பொறிமுறை ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சரான திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த செயல்பாடு தற்போது நாட்கள், வாரங்கள் அல்லது சிலநேரங்களில் மாதங்கள் எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மே 19ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கை முதலீட்டுச் சபையின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கான மாற்றங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஸ்தாபிக்கப் பட்ட விசேட கண்காணிப்புக் குழு முதலீட்டு அனுமதிகளை விரைவாக வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி வெளிநாட்டு முதலீட்டு திட்டத்தை தொடங்குவதற்கு அனுமதி பெற வேண்டிய அரசு நிறுவனங்களின் நிர்வாக மட்ட அதிகாரிகள் கொண்ட குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

“இது இதுவரை வெற்றிகரமாக உள்ளது, மேலும் புதிய முதலீட்டு சட்டத்தின் கீழ் இன்னும் திறமையான மற்றும் நட்புரீதியான முறையில் அனுமதிகளை வழங்க முடியும்,” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியின் உதவியின் கீழ் இலங்கையின் எதிர்காலத் தேவைகள் மற்றும் உலகளாவிய முதலீட்டுச் சட்டங்களுக்கு இணங்கக்கூடிய புதிய முதலீட்டுச் சட்டமொன்றைத் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. - என்றார்.

(ஐ)






ஈழநாடு



# கிழக்கில் டெங்கு தாக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துக!

## மாகாண ஆளுநர் பணிப்பு

திருமலை, மே. 12

**டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்கவேண்டுமென கிழக்கு மாகாண அதிகாரிகளுக்கும், சுகாதாரத் தரப்பினர்களுக்கும் கிழக்கு மாகாண அளுநர் அனுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார்.**



டெங்கு-3 வைரஸ் பிறழ்வின் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றதையடுத்து, இதனைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந் துரையாடலின்போதே அவர் இப்பணிப்புரையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்-

டெங்கு-3 வைரஸ் பிறழ்வின் தாக்கம் மிக வேகமாக அதிக ரித்து வருகின்றது. இதனை கட் டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அதேவேளை, அதற்கான விழிப் புணர்வுகளையும் பொதுமக்க ளுக்கு வழங்க நாம் வேண்டும்.

தற்போது, டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப் படுகின்றது. இந்த அபாய எச்ச ரிக்கையிலிருந்து எமது மக்களி னதும், நாட்டினதும் பாது காப்பை நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வதற்கான சகல செயற் றிட்டங்களையும், முன்னெடுப் புக்களையும் மேற்கொள்ள வேண்டும். இதனை கருத்திற் கொண்டு நாம் அனைவரும் ஒன்றினைந்து டெங்கு-3 பிற ழ்வின் தாக்கத்தை கட்டுப்ப டுத்துவதற்கான சகல நடவடிக் கைகளையும் முன்னெடுத்து செயற்படவேண்டும்-என்றார்.

இக்கலந்துரையாடலில், கிழக்கு மாகாண பிரதம செயலா ளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்னாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முதளிதரன், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே. ஜீ.முத்துபண்டா, கல்வி அமைச் சின் செயலாளர் எச்.இ.எம். டபிள்யூ.ஜி. திசாநாயக்க, கிழக்கு மாகாண தொற்று நோயியல் பிரிவின் விஷேட வைத்திய நிபு ணர் வைத்தியர் எஸ்.அருள்கும ரன், சுகாதார சேவைகள் மாகா ணப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர் உள் ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டு தங்களின் கருத்துக் களை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிரிக்கெட் சீருடை வெளியீட்டு வைபவம்



அக்கரைப்பற்று, மே. 12

காரைதீவு விளையாட்டு கழ கத்தின் கிரிக்கெட் அணியின ருக்கான புதிய சீருடை வெளி யீட்டு வைபவம் நேற்றுமுன்தி னம் மாலை நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில் கழக தலைமையகத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கழகப் போசகரும், உதவிக் கல்விப் பணிப்பாளரு மான வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கழக முன்னாள் தலைவர்க ளான சி. நந்தகுமார், கே சசிகர பவன் ஆகியோர் கௌரவ அதி திகளாக கலந்து சிறப்பித்தார் கள்.

கழக நீண்ட கால உறுப்பி னர் தில்லையம்பலம் தயாகரன் இச்சீருடைக்கான அனுசரணை யாளராகவிருந்து அவற்றை அன்பளிப்பு செய்திருந்தார்.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் டெங்கு தாக்கம் அதிகம்

மட்டக்களப்பு, மே. 12

கிழக்கு மாகாணத்தில் டெங்கு தொற்று அதிகரித்து வருவதாகவும் சிமேந்து தொட் டியில் நீர் சேமித்து வைப்பதே டெங்கு நுளம்பின் அதிக பெருக் கத்துக்கு காரணமாக இருப்பதா கவும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத் திய நிபுணர் வைத்தியர். எஸ். அருள்குமரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் 17 வார காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இதுவரை அண் ணளவாக 3,837பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி யிருப்பதுடன், மூன்று டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதர பிரிவின்கீழ் 1,320 பேர் பாதிக்கப்பட்டுள்ள துடன், மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்க ளில் டெங்கு தொற்றுக்குள்ளா கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அத்துடன், கல்முனை பிராந் திய சுகாதார பிரிவின்கீழ் சுமார் 1,180 பேர் பாதிக்கப்பட்டிருந் தாலும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தொற்றுக்குள்ளா னவர்களின் வீதம் குறைவடைந்து காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத் தைப் பொறுத்தவரையில் இது வரை 1,261பேர் தொற்றுக்குள் ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொற்றின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அந்தவகையில், உப்புவெளி சுகாதார பிரிவில் இதுவரை 6 மற்றும் 43 வயதுடைய இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளன.

நகரப்புறங்களைப் பொறுத் தவரையில் நீர் பற்றாக்குறை நிலவுகின்றமையினால் சுத்தமான நீரை மக்கள் சேமித்து வைத்து பயன்படுத்தி வருகின்றார்கள்.

குறிப்பாக, சிமேந்து தொட் டியில் சேமித்து வைக்கின்ற தெளிவான நீர் டெங்கு நுளம்பின் அதிக பெருக்கத்திற்கு உதவிபுரி கின்றது. எனவே, இது போன்ற நுளம்பு உட்புகக்கூடிய கலன்க ளிலோ, தாங்கிகளிலோ நீரை சேமித்து வைப்பதை மக்கள் தவிர்த்து நுளம்பு உட்புகாத பாதுகாப்பான தாங்கிகளை பயன்படுத்துவதோடு, வீட்டி லும் அதன் சுற்றுப்புறங்களிலும் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய பிளாஸ்டிக் கோப்பைகள், இள நீர் கோம்பைகள், ரயர்கள், பொலித்தீன் பைகள் போன்ற வற்றை அகற்றவேண்டும்-என்றார்.

# விபுலானந்தரின் நூற்றாண்டு துறவற தினவிழா பிரகடனம்!



அக்கரைப்பற்று, மே. 12

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிக ளாரின் நூற்றாண்டு துற வற தின விழா பிரகடனம் காரைதீவில் பிரகடனப்ப டுத்தப்பட்டது.

காரைதீவு சுவாமி விபு லாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் அமைந்துள்ள விபுலா னந்த திருவுருவச்சிலை முன்னிலையில் இப் பிரகடனம் சிறப்பாக இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிர தம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அவரிடம் பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆக்கங்கள் அடங்கிய நூலையும் ,அடிகளாரின் திருவு ருவப் படத்தையும் விழா துவக்க முத்திரையாக கையளித்தார்.

துறவற நூற்றாண்டு விழா பிரகடனத்தை முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா வாசித்து உரையாற்றி பிரகடனப்படுத்தினார்.

துறவற நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றிய திட்டமிடலை பணிமன்றம் இன்றிலிருந்து மேற் கொள்ள வேண்டும் என பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் கேட் டுக் கொண்டார்.

கணக்காய்வாளர் வி.குலேந்திரன் உள்ளிட்ட பணிமன்ற நிர்வாகி கள் மற்றும் நடன மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

(அ)

# எழுத்தாளர் ஜெயராஜா காலமானார்

திருமலை, மே. 12

எழுத்தாற்றல் மூலம் கின்னஸ் உலக சாதனைக்கு முயற்சி செய்த பன்முக சமூக ஆய்வு எழுத்தாளர் அனிஸ்டஸ் ஜெயராஜா புதன்கிழமை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 65 ஆகும்.

கடந்த சில நாட்களாக சுகவீனமுற்றிருந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் சிகிச்சை பய னின்றி மரணமடைந்ததாக குடும்பத்தினர் தெரிவித் தனர்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் அனிஸ்டஸ் ஜெயராஜா “மரணம் ஒரு முடிவல்ல, ஒரு நாளில் வாழ்வு, இந்தியாவே நீயுமா, போரும் மனிதனும், எனது தேசம் எனது மக்கள், ஹலால் அடக்கு முறைக்கு எதிரானது உள்ளிட்ட 27 நூல்களை எழுதியுள்ளதோடு அவற்றில் 25 நூல் களை வெளியிட்டுள்ளார்.

இவற்றில் குறுநாவல், சமூகநாவல் மற்றும் கட் டுரை நூல்கள் உள்ளடங்குகின்றன.

இவருடைய சேகுவேரா எனும் முதலாவது நூல் 1979ஆம் ஆண்டு திருகோணமலையில் வெளியிட் டப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி காலை எட்டு மணிக்கு திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் நூலகத்தில் கின்னஸ் சாதனை முயற்சியாக உணவு, குடிதண்ணீர், ஓய்வு இன்றி தொடர்ச்சியாக 12 மணி நேரம் அவர் எழுதியிருந்தார்.

முதல் 04 மணித்தியாலம் எழுத்தும் எனது வாழ் வும் எனும் தலைப்பிலும் அடுத்து 04 மணித்தியா லங்கள் எனது வாழ்வும் உங்கள் கரண்சியும் எனும் தலைப்பிலும் இறுதி 04 மணித்தியாலங்கள் கரன்சி இல்லாத உலகம் எனும் தலைப்பிலும் அது அமைந் திருந்தது.

(அ)

ஈழநாடு



# 2020 ஆம் ஆண்டில் 1.34 கோடி குழந்தைகள் குறை பிரசவம்!

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்

நியூயோர்க், மே. 12

**கடந்த 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 1.34 கோடி குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறந்துள்ளதாக ஐக்கியநாடுகள் சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனம், ஐக்கி நாடுகள் சபை குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) மற்றும் தாய் -சேய், குழந்தைகள் சுகாதார கூட்டமைப்பு (பி.எம்.என்.சி. எச்) ஆகியவை இணைந்து 'குறை பிரசவ குழந்தைகள்' என்ற தலைப்பில் ஒரு ஆய்வை நடத்தின.

அதில் கடந்த 2020ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 1.34 கோடி குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 9.9 சதவீதம் குழந்தைகள் குறை பிரசவத்தில் (37 வாரத்துக்கு முன்பே பிறத்தல்) பிறந்துள்ளன.

இது 2010ஆம் ஆண்டில் 9.8 சதவீதம் ஆக இருந்தது. 2020 இல் குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 1.34 கோடி ஆகும். இதில் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் இறந்துவிட்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டில் பங்களாதேஷில் குறை பிரசவம் அதிகபட்ச அளவாக (16.2மூ) பதிவாகி உள்ளது. மலாவி (14.5மூ), பாகிஸ்தான் (14.4மூ) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. கிரீஸ் (11.6மூ), அமெரிக்கா (10மூ) ஆகிய அதிக தனிநபர் வருமானம் கொண்ட நாடுகளிலும் குறை பிரசவம் அதிக அளவில் பதிவாகி உள்ளது.

2020 ஆம் ஆண்டில் குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளில் 45 சதவீதம் பேர் இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, சீனா மற்றும் எத்தியோப்பியா ஆகிய 5 நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

2010 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் போர், காலநிலை மாற்றம், கொரோனா வைரஸ் மற்றும் விலைவாசி உயர்வு ஆகிய 4 முக்கிய காரணிகள் பெண்கள் மற்றும் குழந்தைகளை அதிக அளவில் பாதித்துள்ளன.

உதாரணமாக, காற்று மாசு காரணமாக ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறப்பது தெரிய வந்துள்ளது. (அ)

# வீட்டு கூரையை பிரித்துக் கொண்டு படுக்கையறையில் விழுந்த விண்கல்

நியூயோர்க், மே. 12

விண்கல் ஒன்று வீட்டு படுக்கையறைக்குள் விழுந்துள்ளது.

அமெரிக்காவின், நியூ ஜெர்சியின் ஹோப்வெல் டவுன்ஷிப்பில் உள்ள ஒரு வீட்டில் கடந்த திங்கள் கிழமை இந்த சம்பவம் நடந்துள்ளது.

வானிலிருந்து விழுந்த விண்கல் எனக் கருதப்படும் உலோகப் பொருள் திடீரென வீட்டின் கூரையை பிரித்துக் கொண்டு, படுக்கையறையில் விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்தபோது குடும்ப உறுப்பினர்கள் யாரும் படுக்கையறையில் இருக்கவில்லை. அதனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

நியூஜெர்சியில் உள்ள ஹோப்வெல் டவுன்ஷிப் பொலிஸ்துறை வெளியிட்ட அறிக்கையின்படி, எட்டா அக்வாரிட்ஸ் என்று அழைக்கப்படும் தற்போதைய விண்கல் மழையுடன் தொடர்புடையதாக அதிகாரிகள் சந்தேகித்தாலும், பொருளின் துல்லியமான தன்மையை தீர்மானிக்க பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எட்டா அக்வாரிட்ஸ் விண்கல் மழை என்பது ஆண்டுதோறும் நிகழும் ஒரு நிகழ்வு ஆகும். இதன்போது, விண்கல் குப்பைகள் பூமியின் வளிமண்டலத்தில் கொட்டும்.



விண்கல் சங்கத்தின் கணிப்புகளின்படி, வான நிகழ்வு மே 27 வரை நீடிக்கும் என்றாலும், சனிக்கிழமை உச்சம் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பாறை விழுந்த வீட்டின் உறுப்பினர் சுசி கோப் கூறுகையில், "தந்தையின் படுக்கையறையில் அது விழுந்தது. ஒரு சீரற்ற பாறை என்று நான் நினைத்ததால் நான் அதைத் தொடேன். அது சூடாக இருந்தது. என் தந்தை இங்கு இல்லாததற்கு நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்"என்று கூறினார்.

விண்கற்களின் வெளிப்புற உறையானது, அதிக வேகத்தில் அடர்த்தியான வளிமண்டலத்தில் விழுவதால், பொருளின் அதிக அழுத்தம் மற்றும் உராய்வு காரணமாக, எரியும் வெப்பநிலையை அடையலாம். இருப்பினும் அவை பொதுவாக தரையை அடையும் முன் குளிர்ந்து விடுகின்றன. (அ)

# தீவிரவாத அமைப்பின் உயர் தளபதி காசாவில் வான் தாக்குதலில் மரணம்

காசா, மே. 12

காசாவில், இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் தீவிரவாத அமைப்பின் உயர்மட்ட தளபதிகளில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசா பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் விடியற்காலையில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் பயங்கரவாத அமைப்பின் உயர்மட்ட தளபதியே கொல்லப்பட்டார் என குறிப்பிடப்படுகின்றது.

ஹமாத் ரெசிடென்ஷியல் சிட்டியில் உள்ள கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

காசாவில் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது 460 க்கும் மேற்பட்ட



எறிகணைத் தாக்குதல்களை நடத்திய நிலையில், அவற்றில், 130 இற்கும் அதிக இலக்குகளை இஸ்ரேலிய இராணுவம் தாக்கி அழித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 9 மாதங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் இந்த தாக்குதல் கடுமையானதாக கருதப்படுகின்றது.

இந்த வார தாக்குதல்களில் சுமார் 24 பேர் உயிரிழந்துடன், அவற்றில் குறித்த பயங்கரவாத அமைப்பின் மூன்று தளபதிகளும் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# நைஜீரியாவில் படகு கவிழ்ந்து மூழ்கியது!

## 17 சிறுவர்கள் உயிரிழப்பு!!



அபுகா, மே. 12

நைஜீரியா நாட்டின் வடமேற்கு மாநிலம் சொகோடோ அருகே படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் சிக்கி 17 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் மாயமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சொகோடோ அருகே இருக்கும் பகுதி ஒன்றில் விறகு சேகரிக்க 20 இற்கும் மேற்பட்டோர் படகில் சென்றுள்ளனர்.

படகில் சிறுவர், குழந்தைகள் உள்ளிட்டோரும் பயணம் செய்துள்ளனர்.

படகு ஆற்றின் நடுவில் சென்று கொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஏற்பட்ட படகு விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் 13 சிறுமிகள், 2 சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படகில் பயணம் செய்து காணாமல்போனவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக மீட்புப் படையினர் தெரிவித்தனர். (அ)

# பின்லாந்து பிரதமர் சனா விவாகரத்து!



ஹெல்சிங்கி, மே. 12

பின்லாந்தின் பிரதமர் சனா மரீனும் அவரின் கணவரும் விவாகரத்து பெறுவதற்கு கூட்டாக விண்ணப்பித்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு தனது 34 ஆவது வயதில் பின்லாந்தின் பிரதமராக சனா மரீன் பதவியேற்றார். அப்போது உலகின் மிக இளமையான பிரதமராக அவர் விளங்கினார். பின்லாந்து வரலாற்றில் மிக இளமையான பிரதமர் அவரே.

தனது காதலரான மார்க்ஸ் ரெய்கோனெனை 2020 ஆம் ஆண்டு சனா மரீன் திருமணம் செய்தார். பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இத்திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு முன்னரே இவர்கள் நீண்ட காலமாக இணைந்து வாழ்ந்தனர். இத்தம்பதியினருக்கு 5 வயதான ஒரு மகள் உள்ளார்.

'நாம் இருவரும் 19 வருடங்களாக இணைந்து வாழ்ந்தோம். நாம் மிகச்சிறந்த நண்பர்களாக நீடிப்போம்' என இருவரும் இன்ஸ்டாகிராமில் தனித்தனியாக தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடந்த பின்லாந்து தேர்தலில் சனா மரீனின் எஸ்டிபி கட்சி தோல்வியடைந்தது. எனினும் புதிய பிரதமர் பதவியேற்கும் வரை சனா மரீன் பிரதமராக நீடிக்கிறார்.

பிரதமராக பதவி வகித்த நிலையிலேயே சனா மரீன் திருமணம் செய்தார். அப்பதவியிலிருந்து விலகுவதற்குள் அவர் விவகாரத்துக்கு விண்ணப்பித்துள்ளார். (அ)

# 27 ஓட்டங்களால் டில்லியை வீழ்த்தியது சென்னை அணி!



சென்னை, மே 12

ஐ. பி. எல். இருபது 20 கிரிக்கெட் தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் டோனி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை அணியின் எந்த துடுப்பாட்ட வீரர்களும் 30 ஓட்டங்களை எட்டவில்லை. டெவன் கொன்வே 10, ருதுராஜ் கெய்க்வாட் 24 ஓட்டங்களில் அக்சர் பட்டேல் பந்தில் ஆட்டமிழந்தனர்.

மொயின் அலி 7, அஜிங்க்ய ரஹானே 21 ஓட்டங்களில் வெளியேறினர். ஷிவம் துபே 12 பந்துகளில், 3 சிக்ஸர்களுடன் 25 ஓட்டங்கள் விளாசிய நிலையில் மிட்செல் மார்ஷ் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அம்பதி ராயுடு 23, ரவீந்திர ஜடேஜா 21 ஓட்டங்களில் வெளியேறினர். டோனி 9 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 20 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மிட்செல் மார்ஷ் பந்தில் ஆட்டமிழந்தார்.

டில்லி அணி சார்பில் மிட்செல் மார்ஷ் 3, அக்சர் பட்டேல் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இறுதிக்கட்டத்தில் டோனி அதிரடியாக விளையாடியதால் சென்னை அணியால் வலுவான இலக்கைக் கொடுக்க முடிந்தது.

168 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பாட்டம் செய்த டில்லி கப்பிட்டல்ஸ் அணியால் 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

டேவிட் வோர்ணர் 0, பில் சால்ட் 17, மிட்செல் மார்ஷ் 5, மனீஷ் பாண்டே 27, ரீலே ரோஸோவ் 35, அக்சர் படேல் 21, ரிபால் படேல் 10, லலித் யாதவ் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அமன் ஹக்கீம் கான் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை தரப்பில் மதீஷ பத்திரண 3, தீபக் சாஹர் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக ஜடேஜா தேர்வானார்.

27 டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சென்னை அணிக்கு இது 7ஆவது வெற்றியாக அமைந்தது. 12 போட்டிகளில் விளையாடி உள்ள சென்னை 15 புள்ளிகளுடன் பட்டியலில் 2ஆவது இடத்தில் தொடர்கிறது.

லக்னோ அணிக்கு எதிராக சென்னைமோதிய ஆட்டம் மழை காரணமாக ரத்தாகி இருந்தது. தற்போதைய வெற்றியின் மூலம் சிஎஸ்கே பிளே ஓவ் சுற்றை நெருங்கியுள்ளது. டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு இது 7ஆவது தோல்வியாக அமைந்தது. 11 போட்டிகளில் விளையாடி உள்ள அந்த அணி 4 வெற்றிகளை பெற்று 10 அணிகள் கலந்துகொண்டுள்ள தொடரில் 8 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் தொடர்கிறது. டில்லி அணி எஞ்சிய போட்டிகளில் ஒன்றில் தோல்வியடைந்தாலும் தொடரில் இருந்து வெளியேறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பார்சிலோனா அணியிலிருந்து செர்ஜியோ விலகுகின்றார்!

பார்சிலோனா, மே 12

பார்சிலோனா கழகத்தின் அணித் தலைவரான செர்ஜியோ புஸ்கெட்ஸ் இந்தப் பருவகாலத்தின் இறுதியுடன் அந்தக் கழகத்திலிருந்து வெளியேறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

34 வயதான செர்ஜியோ புஸ்கெட்ஸ் ஸ்பெயின் அணியின் முன்னாள் வீரர் ஆவார்.

பார்சிலோனா கழகத்துக்காக 18 வருடங்களில் 718 போட்டிகளில் செர்ஜியோ புஸ்கெட்ஸ் விளையாடியுள்ளார். அந்தக் கழகத்தின் வரலாற்றில் ஆகக்கூடுதலான போட்டிகளில் விளையாடிய வீரர்களில் 3 ஆவது இடத்தில் அவர் உள்ளார்.

2005ஆம் ஆண்டு பார்சிலோனாவின் கனிஷ்ட அணி வீரராக இணைந்த புஸ்கெட்ஸ், 3 வருடங்களின் பின்னர் சிரேஷ்ட அணியில் விளையாட ஆரம்பித்தார். மத்தியகள வீரரான அவர், கடந்த 15 வருடங்களில் சிரேஷ்ட அணி சார்பில 18 கோல்களையும் புகுத்தியதுடன் 40 கோல்களை புகுத்த உதவி வழங்கியுள்ளார்.

ஸ்பெயின் தேசிய அணியின் முன்னாள் தலைவரான புஸ்கெட்ஸ், 2010ஆம் ஆண்டின் உலகக் கிண்ணம், 2012ஆம் ஆண்டின் ஐரோப்பிய சம்பியன் கிண்ணங்களை ஸ்பானிய அணி வெல்வதற்குப் பங்காற்றினார். கடந்த டிசெம்பரில் சர்வதேச போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெற்றார்.

# ஐ. சி.சியிடமிருந்து இந்தியாவுக்கு 8,523 கோடி ரூபாய் வருமானம்

International Cricket Council

டுபாய், மே 12

சர்வதேச கிரிக்கெட் சபைக்கு (ஐ. சி. சி) அதிக வருவாயை இந்திய கிரிக்கெட் கட்டுபாட்டு சபை (பி.சி.சி.ஐ.) ஈட்டித் தருகின்றது.

இதற்கு அடுத்தப்படியாக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வருவாயை ஈட்டிக்கொடுக்கின்றன. இந்த 3 நாடுகளுக்கு ஐ. சி. சி. சமமான அளவில் வருவாயை பகிர்ந்து அளித்தது.

இந்த நிலையில் 2024 முதல் 2027 வரையிலான வருவாய் பகிர்வு பரிந்துரை திட்டத்தை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதன்படி இந்தியாவுக்கு பெரும் அளவில் வருவாய் கிடைக்கிறது. ஐ.சி.சி. வருமானத்தில் இந்தியா மிகப்பெரிய பங்கு வகிப்பதால் ஆண்டுக்கு ரூ. 8 ஆயிரத்து 523 கோடி (இலங்கை மதிப்பில்) வருமானம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

ஐ. சி. சியின் மொத்த வருவாயில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு 38.5 சதவீதம் கிடைக்கும். ஐ. சி. சியின் ஆண்டு வருமானம் ரூ. 22 ஆயிரத்து 135 கோடியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு ரூ. ஆயிரத்து 521 கோடி வருவாய் கிடைக் கும். அதாவது ஐ. சி. சி. வருவாயில் 6.89 சதவீதம் கிடைக்கும். இங்கிலாந்தைவிட இந்தியாவுக்கு 6 மடங்கு வருமானம் கிடைக்கிறது.

அவுஸ்திரேலியா 3ஆவது இடத்தில் உள்ளது. அந்த நாட்டுக்கு ரூ. ஆயிரத்து 381 கோடி வருவாய் கிடைக்கும். அதா வது 6.25 சதவீதம் வருமானம் கிடைக் கும். இதற்கு அடுத்தபடியாக பாகிஸ் தான் கிரிக்கெட் சபைக்கு ரூ. 1,269 கோடி (5.73 சதவீதம்) கிடைக்கும்.

இலங்கைக்கு 4.52 வீதம் அதாவது ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கும். இதர நாடுகளுக்கு நியூசிலாந்து (4.73 சதவீதம்), மேற்கிந்தியத் தீவுகள் (4.58), பங்களாதேஷ் (4.46 ), தென்னாபிரிக்கா (4.37), அயர்லாந்து (3.01), சிம்பாம்பே (2.94), ஆப்கானிஸ்தான் (2.94 ) ஆகிய நாடுகளுக்கு முறையே வருமானம் கிடைக்கும். மீதியுள்ள 11.19 சதவீத அசோசியேட் உறுப்பு நாடுகளுக்கு கிடைக்கும். (ஐ)



# ஐ. பி. எல். தொடரில் மும்பை புதிய சாதனை!

மும்பை, மே 12

ஐ. பி. எல். தொடரின் வரலாற்றில் ஒரு தொடரில் 3 முறை 200இற்கும் அதிகமான ஓட்டங்களை துரத்தி வென்ற ஒரே அணி என்ற புதிய சாதனையை மும்பை இந்தியன்ஸ் அணி படைத்துள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் லீக் போட்டி இறுதிக்கட்டத்தை நெருங்கி வருகின்றன. மும்பையின் வான்கடே மைதானத்தில் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதின.

இதில் முதலில் ஆடிய ஆர்சிபி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து ஆர்சிபி 199 ஓட்டங்களை குவித்தது. இதையடுத்து 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணியின் சூரியகுமார் யாதவ் 6 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 83 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இதையடுத்து 16.3 ஓவர்களிலேயே இலக்கை எட்டி மும்பை வெற்றியை பதிவு செய்தது. இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் ஒரு தொடரில் 3 முறை 200இற்கும் அதிகமானஓட்டங்களை துரத்தி வென்ற ஒரே அணி என்ற புதிய சாதனையை மும்பை இந்தியன்ஸ் அணி படைத்துள்ளது. (ஐ)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் சிறப்புற நடைபெற்ற திருக்குறள் விழா!






முல்லைத்தீவு, மே. 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் திருக்குறள் விழா கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேசத் திற்குட்பட்ட நலன்விரும்பிகளின் அனுசரணையுடன் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டமையை தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் க.விமலநாதன் திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவித்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

சமநேரத்தில் திருவள்ளுவர் தோற்றத்துடன் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த பள்ளிச் சிறுவன் பல்லக்கில் தூக்கி வரப்பட்டு நிகழ்வு நடைபெற்ற மாநாட்டு மண்டபத்துக்கு விருந்தினர்களுடன் அழைத்து வரப்பட்டார்.

தொடர்ந்து குறள் வாழ்த்து இசைக்கப்பட்டது.


மங்கள விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த மேலதிக மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ம.கிரேசியன் வில்வராஜா, கௌரவ விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த பொறியியலாளர் கை.பிரகாஸ் மற்றும் பாலிநகர் மகாவித்தியாலய அதிபர் எஸ்.சிறிகமலநாதன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து ஏனைய அதிதிகளும் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆரணி நர்த்தனாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும், மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள், சமூக மட்ட அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உலக வங்கிப் பணிப்பாளருடன் கல்வி அமைச்சர் சுசில் சந்திப்பு



கொழும்பு, மே. 12


கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், உலக வங்கியின் உலகளாவிய கல்விப் பணிப்பாளர் ஜேமி சாவேத்ராவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் உலகக் கல்வி மாநாட்டின்போது, குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் உலகளாவிய கல்வி இலக்குகளை அடைவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஒரு வாரத்துக்குள் நாட்டினுள் டெங்கை கட்டுப்படுத்துவேன்

## கூறுகின்றார் மேர்வின் சில்வா



கொழும்பு, மே. 12

தனக்கு சந்தர்ப்பம் வழங்கும் பட்சத்தில் நாட்டில் டெங்கு நோய் பரவலை ஒரு வாரத்துக்குள் கட்டுப்படுத்த முடியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, தாம் ஆட்சிக்கு வந்தால் டெங்கு ஒழிப்புப் பிரிவின் உயர் அதிகாரிகளுடனும் சுகாதார அமைச்சுடனும் பேச்சுவார்த்தை நடத்துவேன் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இப்போது அரசியல்வாதிகள் இந்த திட்டத்தில் ஈடுபடவில்லை. தற்போதைய சுகாதார அமைச்சர் எனது நண்பர். அவருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

அத்துடன் அமைச்சர் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையான பொருட்களை வழங்க வேண்டும். நான் ஆட்சியில் இருந்தபோது அதைச் செய்தேன். ஒரு நபர் மட்டுமே எதிர்த்தார். இப்போது டெங்கு ஒரு தொற்றுநோயாக மாறுகிறது.

மேலும் அரசாங்கம் உடனடியாகக் கண் திறந்து செயற்பட வேண்டும். பதவிகள், சம்பளம், வாகனங்கள் எதுவும் வழங்காமல் எனக்கு வாய்ப்பை வழங்குங்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி மக்களின் ஆதரவுடன் டெங்கு பரவுவதை ஒரு வாரத்திற்குள் தடுத்து நிறுத்துவேன்-என்றார். (அ)

# சமூக செயல்பாட்டாளர் பியத் நிகேஷல மீது கடுவலை அரசியல்வாதியின் கும்பல் தாக்குதல்!

கொழும்பு, மே. 12

கைது செய்யப்பட்ட கடுவலை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்ன மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல ஆகியோர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தலங்கம, கொஸ்வத்த சமகி மாவத்தை பிரதேசத்தில் இரு தரப்பினரின் தாக்குதலினால் சமூக ஊடக செயற்பாட்டாளர் ஒருவர் காயமடைந்து தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டதன் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடுவலை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் மற்றும் இரண்டு கார்களில் வந்த சிலர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சமூக ஊடக செயற்பாட்டாளரையும் அவரது காரையும் அந்த குழு தாக்கியுள்ள நிலையில், காயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணையின் போது முன்னாள் மேயரும் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, அவரும் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

எவ்வாறாயினும், இரு தரப்பினர் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவரும் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதற்கமைய, சமூக ஊடக செயற்பாட்டாளர் தற்போது தேசிய வைத்தியசாலையிலும், முன்னாள் மாநகர மேயர் முல்லேரியா வைத்தியசாலையிலும் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை அனுப்ப முயன்ற குழு கைது!

கொழும்பு, மே. 12

33 பேரை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முயன்ற 5 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 33 பேரும் தலா 2 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)

## காணி ஆக்கிரமிப்புகளை...

தொடர்பில் ஒரு பொறிமுறை அமைத்து அது தொடர்பில் பேசி முடி வெடுத்தே நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று தமிழ் கட்சிகள் ஜனாதிபதியை வலியுறுத்தின.

தொல்லியல்துறை மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து தமிழ் பிரதிநிதிகள் வெளிப்படுத்தினர். அத்துடன், இது விடயத்தில் ஜனாதிபதியின் உத்தரவுகள்கூட பின்பற்றப்படுவதில்லை என்று சுமந்திரன் எம். பி. சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியாலும் தொல்லியல் திணைக்களத்தை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதால் இந்தத் திணைக்களத்தை கலைத்துவிட்டு புதிய அமைப்பை உருவாக்கலாம் என்று சித்தார்த்தன் எம். பி. இதன்போது குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் 20 இடங்களில் தாங்கள் தவறாக நடவடிக்கை எடுத்துவிட்டதாகக் கூறினார்.

இதன்போது, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் காணி சுவீகரிப்பு விடயத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் தொல்லியல் திணைக்களமும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் பேச்சு நடத்தி இது தொடர்பில் தீர்வுகளை எட்டலாம். தீர்வு காண முடியாத விவகாரங்களை அடுத்த சந்திப்பில் பேசலாம் எனவும் ஜனாதிபதி யோசனை கூறினார்.

**பயங்கரவாத சட்டம் வேண்டாம்**

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தேவையற்றது. அதனை நிறைவேற்றக் கூடாது என்று தமிழ் கட்சிகள் வலியுறுத்தினர்.

எனினும், பயங்கரவாத தடை சட்டம் தேவை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார். இதனால், டக்ளஸுக்கு எதிரான நிலைப்பாட்டை சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோர் வெளிப்படுத்த அது கடும் விவாதத்தை கிளப்பியது.

**அரசியல் கைதிகள் விடுதலை**

அரசியல் கைதிகளாக தற்போது சிறைகளில் 30 பேர் இருக்கின்றனர். இவர்களில் 14 பேரின் வழக்குகள் நிறைவடைந்து விட்டன. இதில், பாதிக்கப்பட்ட இரு தரப்பினர் மன்னிப்பு அளிக்க முன்வரவில்லை. இதனால் இருவரை விடுதலை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. மகேஸ்வரன் மற்றும் சரத் பொன்சேகா தரப்பினரே இதுவரை சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய சம்மதம் தெரிவிக்கவில்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், 12 பேரை விடுதலை செய்ய முடியும். 16 பேர் தொடர்பான வழக்குகள் நடைபெறுகின்றன. இதனால், அவர்கள் தொடர்பில் முடிவு எடுக்க முடியாது. எனினும், அவர்களை பிணையில் விடுவிப்பது குறித்து ஆராயப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

முகநூலில் பதிவிட்டவர்கள் தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டவர்களின் வழக்குகளை முடிவுறுத்துமாறும் இதன்போது தமிழ் தரப்பினர் கோரியிருந்தனர்.

**காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம்**

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் ஆணைக்குழுவை நியமித்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கூறினார்.

1983ஆம் ஆண்டிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய வேண்டும் என்று என்று டக்ளஸ் தேவானந்தா கூறினார். இது தொடர்பிலும் சுமந்திரனுக்கும் டக்ளஸுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதில், தலையிட்ட ஜனாதிபதி 2000ஆம் ஆண்டிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆராய குழு நியமிக்கலாம். தேவை ஏற்படின் மற்றொரு குழு 1983ஆம் ஆண்டிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி ஆராயலாம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தின் பிரதிநிதி,

இதுவரை 20 முறைப்பாடுகளை தமது பணிமனையால் ஆராயப்பட்டது என்றும் இராணுவம், தனிநபர்கள், சில அரசியல் கட்சிகள் பற்றியும் முறையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையின் பின்னரே இந்த விடயத்தை செயல்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சில் தென்னாபிரிக்க மாதிரியான நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சர்வதேச அங்கீகாரம் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பில் நாளை (இன்று) பேசுவோம் என்று ஜனாதிபதி கூறினார்.

இதன்போது, இந்த வகையான முடிவற்ற சந்திப்புகளால் எந்த பலனும் இல்லை என்று சம்பந்தன் சுட்டிக் காட்டினார்.

நாங்கள் யாரையும் வற்புறுத்தி அழைக்கவில்லை. பேச அழைத்தோம் - வந்தீர்கள் - பேசுவோம் - முடிவு எடுப்போம் என்று ஜனாதிபதி கூறினார்.

இந்த பேச்சில் தமிழ் கட்சிகள் தரப்பில் இரா. சம்பந்தன் தலைமையில் இலங்கை தமிழரசு கட்சியின் எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், த. கலையரசன், இ. சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம், தமிழ் மக்கள் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோருடன் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் எம். பியும் பங்கேற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்), கு. திலீபன் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ஐ)

## கப்பல்

கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளோம்.

640 கோடி டொலர்களாக வரையறுக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்வதற்கும் இந்தத் தொகை அழிவால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக திறைசேரியில் தனியான கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட தரப்புக்கு இதன் மூலம் தெரிவித்திருக்கிறோம்.

அத்துடன், நமது நாட்டு மக்களை பணத்துக்காக இரையாக்கி விடலாம் என்று கப்பல் நிறுவனம் நினைத்தால் அது தவறு ,நாம் யாரும் பணத்துக்கு அடிமையானவர்கள் அல்லர். நாம் வங்குரோத்து நிலையை அடைந்தாலும், நிதி நெருக்கடி ஏற்பட்டாலும், இந்த நிலையை பயன்படுத்திக்கொண்டு எமது நாட்டை அழிக்கவோ, காட்டிக் கொடுக்கவோ, பலிகடாவாக்கவோ நாங்கள் யாரும் இடமளிக்க மாட்டோம் என்ற செய்தியை குறித்த கப்பல் நிறுவனத்துக்கு நாங்கள் 224பேரும் ஒன்றாக தெரிவிக்க - ஒன்றாக எழுந்து நிற்போம் என கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

## அதிகார...

வெள்ளிக்கிழமை இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசப்படவுள்ளது.

இன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வெடுக்குநாறி எங்கள்...

திணைக்களம் அரசின் கைக்கூலி", "நீதியில்லா நாட்டில் நீதிமன்றம் எதற்கு", "கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்", போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ)

## நாமல் மீதான வழக்கு:

# சட்டமா அதிபருக்கு நீதிமன்று நினைவூட்டலை அனுப்பியது!

கொழும்பு, மே 12

நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான சட்ட ஆலோசனையை துரிதப்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை சட்டமா அதிபருக்கு நினைவூட்டல் அனுப்பியுள்ளது.

பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர்களுக்கு எதிரான எதிர்கால சட்ட நடவடிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை இன்னும் பெறவில்லை என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் மன்றுக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து மேற்குறிப்பிட்ட நினைவூட்டல் பிறப்பிக்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக நீதிவான் விசாரணை செப்ரெம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாமல் ராஜபக்ஷ, சுதர்சன பண்டார கனேவத்த, நித்ய சேனானி, சுஜானி போகொல்லாகம மற்றும் இந்திக பிரபாத் கருணாஜீவ ஆகியோர் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு என்ஆர் கன்சல்டேஷன் பிறைவேற் லிமிற்றெட் நிறுவனத்தில் 15 மில்லியன் ரூபாயும், கவர்ஸ் கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிறைவேற்) லிமிற்றெட்டில் 30 மில்லியன் ரூபாயையும் மோசடி செய்தாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எக்ஸ்பிரஸ்...

அரசாங்கத்தின் இன அழிப்பால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை தொடர்ந்து வலியுறுத்தும்போது சர்வதேச பொறிமுறை நாட்டுக்கு முரணானது - உள்ளக பொறிமுறை ஊடாக தீர்வு காணலாம் என குறிப்பிட்டு அரசாங்கம் இழுத்தடிப்புகளை மாத்திரம் இதுவரை காலமும் முன்னெடுத்தது.

சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை மறுக்கும் அரசாங்கம் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து விவகாரத்தில் நட்டஈடு பெற்றுக்கொள்ள பிறிதொரு நாட்டின் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இந்த செயல்பாடு அரசாங்கத்தின் இனவாத முகத்தை முழு உலகுக்கும் காண்பித்துள்ளது. நாங்கள் சர்வதேச நீதிமன்றத்தை நாடியதை மறுத்த அரசாங்கம் பிறிதொரு நாட்டு நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளது இவர்களின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை கோருகிறார்கள். ஆகவே ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் பேச்சில் நாங்கள் சர்வதேச நீதிமன்ற விசாரணையை அழுத்தமாக வலியுறுத்துவோம் - என்றார். (ஐ)

## பூசகர்...

திகதி நீதி மன்ற அனுமதியுடன் விக்கிரகங்கள் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மீள் பிரதிஷ்டையின் போது தொல்பொருட்களுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை ஆலய பூசாரியையும் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எனினும், இந்த வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசாரியும் இருப்பதனால் அதே வழக்கில் அவர்களை சந்தேக நபர்களாக பெயரிடுவது வழக்குக்கு முரணாக அமையும் என்று நீதிவான் சுட்டிக் காட்டி அவர்களை விடுதலை செய்தார்.

எனினும், ஆலயத்தில் கட்டுமானங்களையோ அல்லது மாற்றங்களையோ ஏற்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்ததுடன், பூசை வழிபாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கவும் அனுமதித்தார்.

இதேநேரம், ஆலயத்தின் இறை விக்கிரகங்களை உடைத்தவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறும் பொலிஸாருக்கு பணிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பில் மூத்த சட்டத்தரணி தி. திருவருள் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். (ஐ - 07)

## மாகாண...

உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனி நபர் சட்டமூலமாக அண்மையில் இதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னாரில்..

பின்னாலேயே சென்றுள்ளனர்.

எனினும், கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பித்த சிறுமிகள் ஊர் மக்களிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, அந்த வாகனத்தை துரத்தி மடக்கிய மக்கள் அதில் இருந்த இருவரை பிடித்தனர்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

எனினும், சிறுமிகளை கடத்துவதற்கு கடத்தல்காரர்கள் முயன்றபோது வாகனத்தில் வெளிநாட்டவர் ஒருவர் இருந்தார் என்று சிறுமிகள் கூறியுள்ளனர். எனினும், மக்கள் வாகனத்தை துரத்திப் பிடித்த சமயம் வெளிநாட்டவர் இருக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

மன்னாரில் சிறுவர்களை கடத்தும் நோக்கில் வாகனங்கள் சுற்றித் திரிகின்றன என்று எச்சரிக்கப்பட்ட நிலையில், இந்த கடத்தல் முயற்சியால் அந்த மாவட்டம் முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

## தொல்பொருள்...

ரணில் விக்கிரமசிங்க.

தொல்லியல் திணைக்களத்துடனான கலந்துரையாடலின்போதே இந்த விடயங்களை அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களம் 2000 ஏக்கர் காணியை மீட்க சென்றிருந்தது. இறுதியில் 200 ஏக்கர் மட்டுமே மிஞ்சியது. அவற்றில் 100 ஏக்கர் அளவிலேயே தேவைப்பட்டது. நாம் எவ்வாறு அந்த பணிகளை செய்வது ஒரு வருடத்தில் நாம் முன்னெடுக்கப் போகும் வேலை திட்டம் தொடர்பிலான திட்டமிடுதல் உள்ளதா இல்லையா? என்றார்.

இதற்கு பதிலளித்த தொல்லியல் திணைக்களத்தினர், எம்மிடத்தில் உள்ளது. பிரச்னை என்னவென்றால் கடந்த 30 வருடங்களாக நாங்கள் வடக்கு - கிழக்கில் பணியாற்றவில்லை. அதனால் வடக்கு - கிழக்கில் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னுரிமை வழங்கினோம். அதனாலேயே அப்பகுதிகளில் அதிகம் பணிகளை முன்னெடுப்பதை போன்று தெரிந்தது. அதற்கான பணம் நமக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. ஏனைய நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் ஊடாகவே கிடைத்தது. சில நேரங்களில் பிக்குகள் வழங்குவர் - என்றனர்.

ஈழநாடு
Eelanadu

# அரகலய பின்னணியில் வெளிநாட்டு குழுவினர்!

*நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு*

கொழும்பு, மே. 12

**அரகலயவுக்கு ஆதரவளித்த வெளிநாட்டு குழு யார் என்பது குறித்தும் விரைவில் மேலதிக விவரங்கள் வெளிவரும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் மட்டுமல்ல, அரகலயவோடு இருந்த மக்கள் விடுதலை முன்னணியும் அரகலயவில் வெளிநாட்டுக் குழுவொன்றுக்கு பங்கு இருப்பதாக இப்போது கூறுகின்றது.

எங்களுடன் இருந்த சக பாராளுமன்ற உறுப்பினர் கூட இந்த விவரங்களை அம்பலப்படுத்திப் புத்தகம் எழுதியுள்ளார்.



ஜே.வி.பி அரகலயவின் ஒரு பகுதியாகும். எனவே அவர்களே இப்போது அரகலயவின் பின்னணியில் சில வெளிநாட்டுக் குழுக்கள் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

தற்போது அரகலயவினால் நியமிக்கப்பட்ட அரசாங் கமே இருக்கின்றது. அரகலயவினால் தான் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியானார். அதன் காரணமாக வே இந்த அமைச்சரவையும் நியமிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# சுருக்கு வலை தொழிலில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது

வடமராட்சி, மே 12

சட்டவிரோத சுருக்கு வலை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஐந்து பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அத்துடன் அவர்களின் இரு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டு கடற்பரப்பில் நடைபெற்றது.

கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கைதானவர்களை பிணையில் விடுவித்த நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் அவர்களை எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுமாறும் உத்தரவிட்டுள்ளனர். (ஐ-02)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதி மரணம்

யாழ்ப்பாணம், மே. 12

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி நேற்று வியாழக்கிழமை யாழ். போதனா வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். உடுவில் பகுதியைச் சேர்ந்த யோகராசா கஜன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக செயலிழப்பு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சில வாரங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# யூரியாவின் விலை மேலும் குறையும்!

கொழும்பு, மே. 12



அரசாங்கத்தினால் வழங்கப்படும் யூரியா உரத்தின் விலையை மேலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

அத்துடன், விவசாயிகளுக்கு ரி.எஸ்.பி உரம் மற்றும் ஏனைய உரங்களை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர் வழங்கும் வேலைத் திட்டம் தொடர்பான யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் கூறினார்.

இதன்படி ஹெக்ரேயர் ஒன்றுக்கு 20,000 ரூபா பெறுமதியான வவுச்சரும், இரண்டு ஹெக்ரேயருக்கு 40,000 ரூபா பெறுமதியான வவுச்சரும் வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

# மக்களின் முறைப்பாட்டையடுத்து 200 அதிகாரிகள் மீது நடவடிக்கை!

கொழும்பு, மே. 12

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் பணிபுரியும் 200 அதிகாரிகளுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்ச ர்ஜானக வகும்புர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கான சேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதில்லை. உதாசீனம், தரக் குறைவாக நடந்துகொள்ளல் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் இந்த அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தி குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே. 12

நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் படி, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 308.66 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 322.70 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் நாணய மாற்று வீதத்தின் அடிப் படையில், அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 310.90 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 324.80 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

அத்துடன், யூரோ, பிரிட்டிஷ் பவுண்ட்ஸ், சுவிஸ் பிராங்க் உள்ளிட்ட நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியிலும் நேற்று கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் 3 இல் 1 மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையில்

**உலக உணவுத் திட்டம் தகவல்**

கொழும்பு, மே. 12

2022 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

6.3 மில்லியன் மக்கள் 2022 ஆம் ஆண்டில் உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையால் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தனர் என அது கூறியுள்ளது.

1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் 2022 இல் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

தொடர்ச்சியான வறட்சி, வெளிநாட்டு கையிருப்பு, அரசியல் நெருக்கடி, உயர் பணவீக்கம் மற்றும் பொதுக் கடன் போன்ற பல காரணிகள் நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை 10 சதவீதமாக இருந்த ஒரு நாட்டிற்கு இது தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் காத்தான்குடியில் 3 பேர் கைது!

மட்டக்களப்பு, மே. 12

காத்தான்குடி பிரதேசத்தில் இரு வெவ்வேறு இடங்களில் 300 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 பேரை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரி வுக்கு கிடைத்த தகவலின் அடிப் படையில் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சம்பவதின மான நேற்று முன் தினம் பகல் காத்தான்குடி பர்சான் வீதியில் வைத்து 25 மற்றும் 28 வயது டைய இருவரை மடக்கிப்பி டித்து கைது செய்ததுடன் அவர் களிடமிருந்து 50, மற்றும் 60 மில்லிக்கிராம் ஐஸ்போதைப் பொருளை மீட்டனர்.

அதேவேளை, ரெலிகோம் வீதியில் வைத்து 190 மில்லிக்கி ராம் ஐஸ் போதைப்பொருளு டன் 33 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு இரு வேவ்வேறு சம்பவங்களில் 300 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 3 பேரை கைது செய்ததுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கைக்கு வருமாறு நடிகர் கமலுக்கு அழைப்பு

சென்னை, மே. 12

இலங்கைக்கு பயணம் மேற் கொள்ளுமாறு நடிகரும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல் ஹாசனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் சார்ளஸ் மன்னர் மற்றும் ராணி துணைவியாரின் முடிசூட்டு விழாவைக் கொண் டாடும் வகையில் சென்னையில் பிரிட்டிஷ் துணைத் தூதுவர் இரவு விருந்துபசாரமொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் தென்னிந்தியாவுக்கான இலங்கையின் துணை தூதுவர் டி. வெங்கடேஷ்வரனும் பங் கேற்றார்.

நிகழ்வின் முதன்மை விருந்தி னரான பத்மசிறி கமல்ஹாசனை சந்தித்த துணை தூதுவர், எதிர் காலத்தில் இலங்கைக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார். (அ)

# கூரையில் ஏறி ஆர்ப்பாட்டம் செய்யும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்!

மட்டக்களப்பு, மே. 12

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கீர்த்தி ரணசிங்க நேற்றுமுன்தினம் காலை முதல் சுரங்க மற்றும் புவிசரிதவியல் பணியகத்தின் அம்பாறை அலுவலகக் கூரையில் ஏறி போராட்டம் நடத்தி வருகிறார்.

குறித்த அலுவலகத்தின் தற்போதைய பிரதானியை நீக்குமாறு கோரி அவர் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக தெரியவந்துள்ளது.

மணல் அகழ்வு உரிமம் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும் எனவும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்து முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

அவரது ஆதரவுடன் சுமார் 50 மணல் உரிமதாரர்கள் அடங்கிய குழுவும் இந்த அலுவலகத்தின் முன் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.